# *Keechaka Vadham.*

**(A TAMIL DRAMA.)**

# கீசகவதம்.

(தமிழ் நாடகம்.)

இஃது

பவானி பாலபாரதி

முத்துச்சுவாமி ஐயர் அவர்கள்

மாணாக்கரும்,

கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

C. R. பத்மநாப ஐயரால்

இயற்றப்பட்டது.

**1912.**

COIMBATORE:

FRIENDS' ASSOCIATION LIMITED, PRINTERS.

*Copy Right Registered.*



யம்ப்ரம்ம வேதாந்த விதோ வதந்தி
பரம்ப்ர தானம் புருஷம்த தாந்யே
அஸ்மின் ஜகத்கா ரணமீச்வ ரம்வா
தஸ்மை நமோவிக்ன விநாய காய.

# நூன்முகம்.

புண்யவான்களே !

தமிழுலகம் பொய்த்துப் போகாவண்ணம் இகபர சார்த்தகமாமாறு நம் கலாசாலைத் தலைவர் தென்மொழி தழைத்தோங்கச்செய்யு முயற்சியை அறியாதார் ஒருவருமிலர். ஆகவே, எம்போலியரும் அக்கருத்தினிற்கிணங்க வெளிவந்து நாடகமியற்றுதல் நலமேயாகும். இத்துணிபுகொண்டே யாம் இயல் இசை நாடகமென்னும் முத்தமிழ் நடையும் விரவியுள்ள ‘ கீசகவதம் ’ எனும் இந்நூலையியற்றியுளேம். இஃது எமது பிரதம முயற்சியாகலின், எம்மிற்பெரியோர் இதனைக்கருதார் : சாமானியர் இதிற்குறை காணார் : சிறியோர் இதனாற் பயன்படுவர். இதுவும் எமது துணிபெனவாக :- கீசகவதக் காதை பாரதத்துளதால் யாவருமறிவர். ஆகலின், ஈண்டெடுத்துரைத்திலம். எனினும், பாண்டவர் மாறுவேடம்பூண்டு விராட பூபனிடம் வருமாற்றினை ஆங்காங்கமையத்திற்கேற்ப மாற்றியும், கீசகன் கதாநாயகனாக அவன் வன்மை விளங்கவேற்றியும், பயன்படாப் பழுதுரை

போற்றியும், தற்கால நாடக வியற்கிணங்க வரைந்தனமென்றே கருதியுளம். இஃதன்றிப் பாக்களும், நடைக்கிணங்கவும், ஆங் காங்கு பழமை பொலியவும், இடர்ப்பாடின்றிப் பல்வகைப்பட மலியவும், நாடகவிலக்கணம், நயவிலக்கணம், ரசவிலக்கணம், சிலேடை மடக்கு, கருத்து முதலின பெறப்படுத்தனவாகக் காணலாம்.

கற்பின் நிலையும், பொற்பின் பொலிவும்
பிறங்கு காதையாற், புருடார்த்த மெய்தவே :

**C. R. PADMANABHA IYER,**
*Coimbator*

# நூல் வரலாறு.

சுமார் 15 வருஷங்களுக்குமுன், நமது பந்துவும் சகபாடியு மாகிய, ஸ்ரீமான் வி. ஆர். பத்மநாப ஐயருடைய தமிழ் 'வலிமை' யைப்பலதடவைகளில் கண்டு மகிழ்ந்திருந்த நாம், அது வீணு காமலேதேனுமோர் துறையில் உபயோகப்படவேண்டி யோசித் ததில், பழையன கழிந்து, புதியன புகுந்ததோர் நாடகமாகுக வெனச்சம்மதித்தோம்.

பிறகு விஷயத்தைச் சிந்தித்ததில், தற்காலம் வெளிவரும் 'ஆதியந்தமற்ற' பல நாடகங்களைப்போல் லக்ஷியங்காணக்கூடாக் கதைகளை யெடுத்தாள்வதைக் காட்டிலும், பிராசீனமாய், நமது நாட்டில் பண்டிதர், பாமரர் அனைவருக்கும் ருசியுண்டாக்கும் ஸ்ரீ மகாபாரதக்கதைகளில் அதிசாரமாகிய 'கீசகவதம்' என் னும் கதையை அப்பெயர்கொண்டே 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென' அன்று கொண்ட தீர்மானம் இன்று 'கருணைகூரீச'னருளால் முடிவுபெற்றது நமக்குப் பெருஞ்சந் தோஷத்தைத் தருவதாம்.

இதைப்படிப்பவருக்கு ஸ்ரீமான் ஐயரவர்களுடைய மனோ தருமம் நன்குவிளங்கும். யாப்பின் விசித்திரங்களையும், மற்றும் ஆங்காங்கு காணக்கூடிய புதைபொருள் வைபவங்களையும், கற் பனையுசிதங்களையும் ஐயரவர்களைப்போன்ற பண்டித ரத்தினங் கள் அறிந்து ஆனந்திப்பர். எம்போலியருக்குப் பழங்கதையைப் புதிய உருவமாக்கித் திராக்ஷைப்பாகமாகக்கூறியது எவ்வளவிற் கும் சிலாக்கியமாகக்காணும்.

ஆதலால் நூல்வல்லோர் இதனை யுள்ளபடி சிலாகித்து பண் டித ஸ்ரீமானுக்கு உற்சாகமூட்டி, அவர் மென்மேலும் இந்தத் துறையில் உழைத்துயர்ந்தோங்குமாறு சகாயிப்பாரென்றும், ஈசுவர சகாயமும் அனவரதமாயிருக்குமென்றும் நாம் நம்பு கிறோம்.

கோயமுத்தூர்,
12-11-12.

C. N. KRISHNASWAMI IYER, M. A., L. T.

# சிறப்புப்பாயிரம்.

## கோயமுத்தூர் காலேஜ் தலைமைப்பண்டிதர் பிரம்ம-ஸ்ரீ வெங்கடரமணையர் அவர்கள் இயற்றியது.

திங்கள் சூடிய தேவருள் பெற்றும்
பொங்கு மூவரி யங்கையி னேந்தி
ஆசமித் துயர்பொதி யாசலத் திருந்த
அகத்திய முனிவ னருள்முத் தமிழில்
இயற்றமிழ் தவிர வேனைத் தமிழ்கள்
போயகா லத்துப் புறத்தவர் வசைச்சொல்
தமிழ்மொழி தன்னைச் சாரா தொழிய
அமிழ்தி னினிய நாடக மதுதனை
கற்பவ ருள்ளம் களிமகிழ் சிறப்பப்
பற்பல சுவையும் பருகிட நல்கினோன்.
அன்னவன் யாரெனில் அணிமதில் செறிந்து
பொன்னியும் பவானியும் பொருந்துமா நகரில்
தன்னே ரில்லாத் தமிழ்க்கிலக் காகிய
பாலபா ரதியெனும் நாவலர் பெருமான்
றன்பாற் கற்ற மன்னுசீர்க் கலைஞன்
முத்தூர் வாவி பலசெறி கோய
முத்தூர் மேவிய முதுமறை யந்தணன்
பதும நாப னெனும்பெயர் கொண்ட
புதுமைசேர் தமிழ்மொழி புகலுநா வலனே.

# நடிகள்.

**பஞ்சபாண்டவர்.**

தருமபுத்திரர்—கங்கபட்டர் (தவமுனி வேற்றுரு.)
வீமன்—பலாயனன் (பரிசாரகன் ,, )
அருச்சுனன்—பிரகந்நளை (நாடகக்கணிகை.)
(பேடி ,, )
நகுலன்—தாமக்கிரந்தி (குதிரைத்தலைவன் ,, )
சகாதேவன்—தந்திரபாலன் (பசுநாயகன் ,, )
மனைவி திரௌபதை—விருதசாரணி (புஷ்பந்தொடுக்கு மாது ,, )

**விராட புருஷர்கள்.**

விராடன்—ராஜன்.
சுதேட்டிணை—விராடன் மனைவி.
உத்தரன்—ராஜகுமாரன்
உத்தரை—ராஜகன்னிகை.
சுமதி, சுசீலை, கோமளை—பாங்கியர்.
கீசகன்—ராஜன் மைத்துனன்.
உபகீசகர்—ஸேனாதிபதி தம்பியர்.
கூனி—செவிலித்தாய்.

**திரிகர்த்த தேசாதிபதிகள்.**

திரிகர்த்தன்—அதிபதி.
தூமகேது—சேனாதிபதி.
நாய்க்கன்—உபசேனாதிபதி.

வாசவன்—மல்லன்.
துவலைப்பண்டிதன்—நீதியுரைப்போன்.
சுப்பையர், அப்புவையர் (வல்விளையாட்டினர்.)

(மந்திரிகள், பிரதானிகள், ஓதுவார், சாரணர், சேவகர், குடிகள், சந்நியாசி, தீக்ஷிதர், வேதப்ராமணர், உபாத்தியாயர், உபாத்யாயினி, மாணாக்கர், காயனர் முதலினர்.)

# கீசகவதம்.

## முதலங்கம். முதற்களம்.

### காமியவனம்.

வேதப்பிராமணர், தௌமியர், திரௌபதை, பாண்டவர் பிரவேசிக்க.

தருமபுத்திரர் — மலரி லொளிக்கு மலர்தரு முகமு,
மலரி லொளிக்கு மற்புத முகிலு,
முளரி யொளிக்கு மொய்தவ முதலு,
முளறி யொளிக்கு முரனு முகக்கலே,
பதும நாபப் பாவலன் போற்றிட,
ஈரா றுண்டு, மின்பமா வான்வண
மேக, வேகின, வெல்லேயோ ராயனம்
நகர்கரந் துறையு நன்று ளடுத்ததா,
லாரிய குலோத்தம வையர்காள் ! ஏதம்
பரியந்த முற்ற பரிபவந் தீர
நாடு சேரு நன்மனத் தா,லெமக்
காசி கூறிடு மநுக்கிரகத் தா,லுமை
வெளிப்படு நாளினில் வணங்கிப்,
பிரிந்த வெமதுயிர்ப் பாக்கியந் தவிர்வமே.

வேதியர் — நீதி வழுவா நெறியினி ராதலா,
லேத மேது மில்லா துமது
நிச்சயப் படியே, யஞ்ஞாத வாசந்
தீர்ந்து தேர்ந்து தெவ்வர்ச் செருத்துத்
தீரமும் புகழுந் தருமமு நாட்டிப்
பல்லாண் டாகப் பார்புரந் திடுமினே.

விரைவி னேக விடையருள் வேந்தகேள்,
குலைவார் தமக்குக் கொழுகொம் பானாய் !
சின்னாட் டென்னுஞ் சிறுமை, பெருமைத்
தளைத்தா ருன்று, தவமாச் செகுத்துப்
பொறைபூண் டொழுகிப் போழ்தூண் டெப்பரா,
லழுங்கேன் மன்ன, வன்புட னேகுவம். (எக)

தருமர் — எம்முடன் கூடி யின்னற் கானகந்
துன்னித் தொடர்ந்த தோழர்காள் ! தோழிகாள் !
நீவிரு மங்கல நல்கூர்ந் தொழித்தெங்
கடவ நாள்கள் கழித்து மீள்வமே.

பரிவாரஜனம் - தருமப்பிரபுவே ! நாங்களிதுகாறுமுமது சேய திருவடிகட்கன்புகூர்ந்து பணிவிடை புரியப் பாக்கியம் பெற்றனம். இன்னுமஃதெமக்கெக் காலுறுமோ வறிகிலம். வினைப்பயன் வெல்வார் யாருமிலர். ஆகையால் நாங்கள் பிரிந்து போனாலும், எமதிதய மும்மோடு கூடியிருக்கும். ஆயினும், கண்கொண்டு காணுமாநந்த மிழந்தோமே ! என் செய்வோம் ? தர்மமே ஜயம் ! யாம் போகிறோம். (எக)

தருமர் — ஊழ்வினைப் பயனோ ? யான்செய் தருமமோ ?
பகைவர் பெருமையோ ? பண்ணவர் பரீட்சையோ ?
இக்கா லென்னை யிகல்கொண் டெதிர்த்து,
முக்கா லுமுன்னு மூண்ட வெம்பழிக்
காளா வென்னை வாளாச் சமைத்துக்,
கிளைதான் வெறுப்பினுங் கேள்கடிந் தொழியக்,
கானிலு மென்னைக் கைகண் டலைப்பதே !

தௌமியர் — உண்மை கைவிடா வுயர்பெரு ஞானமே
திருமேனி யாகிய தேவரீர் துயருறல்,
நொந்துரை யல்லா னென்பிற் கழகல ;
வாகலி, னியாதனை சிந்தனை செய்யா,

தகமகிழ் வோடு மாவ தாய்ந்து,
செய்வது செய்தல், சிலாக்கிய மாமே.

வீமன் — எந்தன் கதையு, மெம்பியர் கைச்சிலையும்,
வழிப்பட் டுமதருள் வாக்கினை,
வேண்டி வேண்டி வெம்மை மிகுந்து,
துட்டர்த் தொலைத்துத், தொலையா மகுடம்
புனைய நிற்கக்,
கடைக்கணித் தருளுங், காருணிய முதலே.

தருமர் — அடக்க மமரரு ளுய்க்கு, மடங்காமை
யாரிரு ளுய்த்து விடுமா, விளவ!
பன்னீ ராண்டும் பட்ட துயருட,
னோராண் டுறுவது பெரிதல, பின்னர்
அரவ கேதன னவையிற் கூறிய
வாய்மை யின்படி வதியா னாகிற்,
படைக ளெல்லாம் பரிந்தே யிருக்க,
விப்போழ் தென்னை லேத, மதனாற்
கரந்துறை நகர மியாதென
வெண்ணி, யந்நக ரேகுதல் கடனே.

அருச்சுனன் - நமது நன்னாட்டு நாற்புறம் பலவள
மேம்பட நின்ற மிகநன் னாடுள;
வாயினு, மவற்று ளடியே னுக்கு
மச்ச மச்ச மகன்றுள, தென்னிற்,
றீமை சிறுத்து, நன்மை பெருத்துக்,
கொடுமை குன்றின குடிவள மோங்கிச்,
செங்கோல் செழிக்குஞ் செந்நக, ரதான்றுந்
துரியோ தனன்றன் றாத ரவனுமுர்;
ஏனைய நாட்டி லெய்துவ; ரதனால்
நாமுறை கரவு நலமே தெரியும்;
புரவல னும்மெம் பூர்வ வுரிமையன்;
ஆகலி, னந்நக ரன்றி வேறே
கண்டில னடியேன் காவல!
தேவரீர் திருவுளந் தெரிந்திலன் சிறுவனே.

தருமர் — தொன்னூ லாய்ந்த தொல்குலத் தேசிக !
பார்த்தன் சொன்னது பழுதல, வதுவே
என்றுணி விடமு மென்னி, லாங்குறு
முறையீ தென்று, முறைவித முடனே
மீள்வும் விளங்க, மெய்ப்பொரு ளறிவா
லெமக்குறை செய்து,ட னிகபர மிரண்டுஞ்
சார்த்தக மாகுஞ் சாதுரிய மறியக்,
கடாட்சித் தருளுங் காருணிய முனிவர !

தௌமியர் — தரும நந்தனா ! விறைவா ! கேட்டி !
யஞ்ஞாத வாச மாரு மறியா
துறைவ தாகலி, னோர்நகர் மேவி
யின்னா ரென்னு மையம் பிறர்கொளா
வகையில் வதிந்து, மீளல் வேண்டும்.
இன்றே, யின்னு மீரா றாண்டு
காடு போதல் கடனா, மதனான்,
மனமொழி மெய்களின் மகிமை தவிர்ந்து,
கோலங் கரந்து, கோட்டியிற் றெண்டா,
யுரிய தொழில்செய் துய்வது நலமே.

வீமன் — புரவலர் பெருமா னாகி வையமோர்
குடைக்கு ளாளும் புண்ணிய முதல்வ !
நுமதுட் பட்ட நுண்ணிய வரசாம்
விராட விறைக்கு வழிப்பட் டூழியம்
செய்யின், மரபின் மாண்பு சிதைவுறும்;
ஏளன முண்டா ; மென்செய் கோயான் ?
களங்க மில்லாக் காம்பிரிய நும்மனம்
நோக நோக நோக்கி நின்று
வழிபடல் வினையே ! விதியே ! கதியே !

தருமர் — தென்றிசைக் கோமான் றிருமந் திரத்தாற்
சுந்திர வேதிய னாகு சூட்சும
மடைந்துள; னதனா லாகுலம் வேண்டாம் ;
வேத மோதிடு வாயுட னேகிற்,

காவல ரெல்லாங் காற்கீ ழிறைஞ்ச,
வாசீர் வதித்தவ, ரனைவரு மவாக்கொள,
வெண்ணூறு விஞ்சையா லெழிலுப தேசமும்,
வல்வினை யாட்டால் வாஞ்சையும் விஞ்சவே,
யவையிற் பூச்சியனு, யாண்டு கழிப்பனே.
சோதர வீமா ! சூரர் நால்வரும்
மணிமா னுந்தான் மடிய வென்று
விடமுண்டு வந்த வீரிய வண்மையு,
மரக்குச் சூதினி லன்னையு முன்னையும்
பின்னையுந், தாங்கிய பெரும்பணைத் தோள்களாற்
பணிவிடை புரியப் பார்க்கச் சகியேன் ;
இங்கித மறியா; யிகலுங் காலமுந்
தேசமு நிகழ்வுந் தேரா; யாத்திர
மாகி யெங்கருத் தழிய வாவா ;
யென்செய் வேன் ? என்பவமே ! யவமே !

வீமன் — பஞ்ச பட்சிய பரமான் னத்துட
னமுதடு தொழிலுக் கதிபதி யாவதும்,
பெருமர மாயினும் பெயர்த்துக் கையா
லிந்தன மாக்கு மிகலோ னவதும்,
மல்லே யெனினு மலைவே னவது,
மிதமாக் கூறி, யேதம் படாது,
மடைய னென்ன மானுவன் மன்னே !

தருமர் — வனமெரிந்த கொடுமெரத்தின் மனமெரிந்த கோல் [கொண்டு,
புனல்விண்ட போனகத்தி னினங்தெண்டு, மினை [ஞனே !
வனமென்ன மனமென்ன புனலென்னப் போனக [த்து
இனமென்ன வேணு மெனக்கு?
விண்டு கொண்டு தெண்டு மெளிமையினே !

அருச்சுனன்— ஊர்வசி சாப முபகார மாகப்,
பேடி யுருவம் பிறங்கப், பெண்களை

யரங்கு பயிற்று மறிவின னாகி,
வேத்தலை தன்னில் வியப்புறச் சென்று,
விராட னுக்கு வழிப்பட், டவனருள்
அடைந், தவ் வரச னரங்க மணைந்து,
நடனம் பயிற்றி, நாட்கள் கழிப்பனே.

தருமர் — நன்று நன்று! நகுலா கேண்மோ!
இளைஞ நீதா, னேது மறியாய்,
என்னை விட்டெங்கு மேகாய், தனியே
ஏதும் புரியா, யெப்படி யாண்டு
கரந்து கழிப்பா? யறியே னையனே.

நகுலன் — அசுவ சாத்திர மறிவே; னதனாற்
குதிரைக் கணமுங், குணமுங், கதியு,
மனைத்து, மறிந்த வதிபதி யென்ன,
மச்ச நாடன் மாணவை புக்கு,
முறண்டு மாறு மாவினை யாற்றி,
வயக்கி, வேண வரிசை பெற்று,
வற்சரங் கழிவேன்; வாய்மைக் கரசே!

சகாதேவன் — யானும் பசுபதி யாகி, யந்நகர்
மேவு சிந்தைய னேனே; னதனாற்,
றுயரம் வேண்டாந், தூய முதலே!

தருமர் — மந்திர முற்று முணர்ந்த மகிமையாற்,
பஞ்சா யுதன்றன் பரிசு பெற்றாய்.
மானே! துருபதன் பாவாய் கேண்மோ!
பாங்கியர் பலரும் பணிவிடை புரியச்,
சிறப்புற் றோங்குஞ் சீறடி நோவப்,
பஞ்சணை மேவும் பணைத்தோ ளேவக்,
காடு கடந்து, நாட்டிடை யேவல்
செயலெவ் விதமோ? வறிகில னந்தோ!
ஒருவர்க் கிடிகல் லொத்த வைவரைப்
பெற்றும், பெண்ணின் பாவங் கொள்ளத்

தெருவி லலையத் தேர்ந்து விடுத்தா,
ரென்று வைய மிகழ்ச்சி செயுமே!

திரௌபதை— மன்னர்க் கெல்லா மந்திர மிருக்க,
வென்னர்க் கெல்லா மந்தப் புரமே
யாக வேணுமா, லரசிக் குரிய
வண்ண மகளாய், வேண மலர்கள்
கொண்டு வந்து, கோமனைக் குதவிக்,
கொண்டை யணைந்து, கூரிய திலகந்
தீட்டன் முதலாத் தெரிந்த மட்டும்
புரிந்,தெனை வேட்டோர் புலவை ரென்ன,
வேற்றோர் வேண்டி னேற்றே யழிமெனு
மாற்ற மோதி, மகிழுந் தவமே
விரத மாகி, வதிவன்; விமலமே!

தருமர் — ஆருயி ரமுதே! யறிவே நிறையே
பெண்மைக் குரிய பேணு காவலாற்,
சொற்படி நின்று, சோர்விலா வுரிமை
செய்து மீளல், சிலாக்கிய மாமே.

திரௌபதை— தலைமேற் கொண்டேன் றரும வாக்கியம்;
பிழையா துறைவன் பெண்மட மகன்றே.

தௌமியர் — பொய்யா விரதம் பூண்ட மகிப!
மெய்யா கியநும் மேனி மாற்றி,
யாறு பேரு மங்கர் புகுந்து,
விராட வரசை விரும்பிக் கோடி,
யிறையி ேனக்கிற் றெதிர்நோக் கின்றி,
யேவின செய்தலி னிகழ்வில ராகி,
மேம்பட வொழுகி, மேவின காலங்
கழித்து நீங்கிக், காவல ராகிச்,
சிறக்க வோங்கிச், சீர்பெற வாழ்கவே!

தருமர் — விப்பிர வாரிய! வேண்டின வாறே
விராடம் புகுந்து மீள்வம்; விரும்பி

ஐவர்க் குளவெம் மௌபா சாக்கினி
கைக்கொண், டாண்டு கானக மேவி,
நற்றவம் புரிதி யையா !
திருவடி தொழுதனந், தேறுத லருள்கவே.

தௌமியர் — வாழ்க வாழ்க ! வாய்மை வாழ்க !
விரும்ப வனைத்தும் விமல னருளாற்
சிறக்க வோங்கிச் சீர்பெற வாழியே. (ஏக)

சகாதேவன் — மாலைக் கடனை முடிக்கப் போக,
வாலய மொன்றுள; தந்த விடத்திற்
குளமு மொன்று; குளிர்நன் னீரதிற்;
புறமே வீங்கிய பெருமரந் தோன்றப்,
பாங்கர் விராடப் பெயர்பொறி சிலையுங்
கண்டு மகிழ்ந்து, கோயிற் புகவே,
சிவந்த மேனியுஞ், சேந்த வுடையுஞ்,
சிவந்த பொன்னால் நிவந்த குழையுங்,
கன லுமிழ் முகமுங், கனிந்த பார்வையுங்,
கோரைத் தந்தமுங், குமுறு சிரிப்புங்,
கபாலக் கையுங், களேபர மாலையு,
முத்தலைச் சூலமு, முளைவெண் பிறையு,
மெத்தலை யானு மிதுவே தோற்றப்,
பெற்ற மாதா பேரரி போற்றப்,
பற்றல ரெல்லாம் பிராணனை நல்க,
விருந்த விருப்பு, மெழிலுறு நிலையும்,
பார்க்கப் பார்க்கப், பதினா யிரங்கண்
போதுமோ ? பார்த்த ! புகலொணு தென்னல் !

அருச்சுனன் -- இதுவே போது, மெம்பி சகாயமே!
கோயில் புக்குக், கொதித்த தாயைக்
குளிர வாட்டிக், குறையெலாங் கூறி,
வரப்பி ரசாதம் வரையறப் பெற்றுக்,
கவலை நீங்கிக், காவலன் பதியிற்
செல்லு மாறும், சிலைமுதற் படையுந்

துறக்கு மாறுந் துணியத், துணையா
வென்னப் போற்றி, யெந்தா யாணையி
னிற்கப் போவம், நிலவு வரவே.

சகாதேவன் — ஆயுத மனைத்து மறிவுறு வகைப்
பெருத்த மரத்தின் பொந்தரிற் புதைத்து,
மகத்தாந் தாயே மகிழ்ந்து புரக்க
வேண்டிப் போற்றி, வெவ்வினை போகப்,
பின்னை விராட புரத்துட் போவமே.

அருச்சுனன் — பெருமர மென்னை பெயரின தஃது ?
மிருப்பிட மெனக்குத் தெரியச் சொல்லே.

சகாதேவன் — வன்னி யெந்தாய் வலப்புற மாக
மன்னி முளைத்தது துன்னிய கற்பம் ;
வன்னி வன்னி யென்று வுலகந்
துன்னித் துன்னித் தொடர்தரு வாமம் ;
கட்டு தந்திரம் ; கனமுறு மேமம் ;
வசிய மனைத்தும் வகித்த முதல்வனும் ;
போனக வமுதின் பொருட்குலங் கட்டித்,
தன்னைக் கட்டித் தரணியுங் கட்டுமே.

அருச்சுனன் — பின்னை யென்ன பேசுவ துளதோ ?
மூச்சு விடாமன் மொழிந்த மொழிப்படி
யாகுது மாக, வினைவரு மின்னே
ஏகுது மாக, வெழில்பெறு மாறே. (௭௧)

# முதலங்கம். இரண்டாங்களம்.

## விராடபுரம். ராஜவீதி.

மாணாக்கர், தீட்சிதர், உபாத்தியாயர், பிரவேசிக்க.

தீட்சதர் - ஏன்காணும் உபாத்தியாயரே! சிஷ்யப்பிரபிருதிகளுக்கு எதுவரையில் சாத்தியப்படுத்தினீர்?

உபாத்தியாயர் - எல்லே! எல்லே! குழந்தைகள்! இப்பொழுது தான் ஆரம்பித்திருக்கிறார்கள்.

தீட்சிதர் - குழந்தைகாள்! எங்கே? சபா வந்தனம் சொல்லும் பார்ப்போம்?

மாணாக்கர் - "ஓம் நமஸ் ஸதஸே, நமஸ் ஸத சத்பதயே, நமஸ்ஸகீநாம், புரோகாணாஞ் சட்சஸே, நமோதிவி, நமப் பிரதிவியை."

தீட்சிதர் - ஸ்பஷ்டமாயிருக்கிறது உபாத்தியாயரே! எக்ஞோபவீத மெத்தனை ஜோடியாயிருக்கிறது?

உபாத்தியாயர் - ஐம்பதுதான் ஆயிருக்கிறது. கொஞ்சம் நூற்பேன். அதற்குள்ளாக அசலகத்து அப்பு வருவான். சற்று சீட்டுக்காலட்சேபம் செய்வதற்குள்ளாக சந்தியா வந்தன காலமாகிவிடுகிறது.

தீட்சிதர் - கட்டு புதிதா? பழையதா?

உபாத்தியாயர் - அவ்வளவு மோசமில்லை. இஸ்பேட் ஆசும், கிளாவர் க்வீனும், ஆட்டின் ஜாக்கியும், டைமன் பத்துமில்லை. அதற்குப்பதலெழுதியிருக்கிறது. பாக்கிசிலவற்றிற்கடையாளம். ஆனாலு மோசமில்லை. பாக்கி எல்லாஞ் சரியாயிருக்கிறது.

தீட்சிதர் - ஏதோ? கொண்டுவாரும். வெயில்வேளை! சற்றேயாடலாம்.

உபாத்தியாயர் - அடே! பையன்களா! எதிர் வீட்டுத்திண்ணைக்குப்போங்கள். (ஏக,சீட்டுக்கொணர.)

உபாத்தியாயினி மறைவில் - என்றைக்குமிதுவேயாக, என்னை சொல்வது! பேசப்போனால் பல்லைப்பறிப்பர்! எப்படியோ போகட்டும்!

சுப்பையர் வர

தீட்சிதர் - ஐயர்வாள்! இன்றைக்குக் கச்சேரி இல்லையோ?

சுப்பையர் - ஒரு அசல் நம்பர், அடுத்த மாசம் ஐந்தாம் தேதிக்கு வாய்தாப் போட்டுவிட்டார்.

உபாத்தியாயர் - அப்புவையரைப் பார்த்தீரோ?

சுப்பையர் - காப்பி குடிக்கிறார். வருவார். சீட்டைப்போடும்.

உபாத்தியாயர் - (கலந்துபோட) தீட்சிதர் (வெட்ட)

அப்புஐயர் வர

(எல்லாரும் ஆடிக.)

அப்புவையர் - இருபத்தொன்று.

சுப்பையர் - நாலு.

தீட்சதர் - இல்லை.

உபாத்தியாயர் - துருப்பு?

சுப்பையர் - இஸ்பேட்.

அப்புவையர் - இல்லையென்று சொன்னாற்போதாதோ? துருப்பு என்று சொன்னால், மறியல் செய்வேன்.

சுப்பையர் - இப்பொழுது சொல்வது ஒப்பாது. துருப்பு, என்றவுடனே சொல்லவேண்டும்.

அப்புவையர் - சரி! சரி! இனிமேல் ஆகட்டும்!

தீட்சிதர் - இறக்கமென்ன?

சுப்பையர் - ஆட்டின்.

தீட்சிதர் - ஜாக்கி!

உபாத்தியாயர் - பயமில்லை ! (வெட்ட) எடுத்துவையும் ! துருப்பு (இறங்க)

சுப்பையர் - (ஜாக்கிப்பிடி) ஐந்து போயிற்று. துருப்பு (இறக்கம்)

தீட்சிதர் - (ஒன்பது பிடி) (கிளாவர் இறக்கம்)

உபாத்தியாயர் - (ஜாக்கிப் பிடி) (டைமன் இறக்கம்)

சுப்பையர் - (வெட்டிப்பிடி) (இரண்டு ஆட்டின் பிடி)

உபாத்தியாயர் - (கிளாவர் கழிக்க)

சுப்பையர் - (கிளாவர் இறங்க)

தீட்சிதர் - (டைமன் ஜாக்கி கழிக்க)

அப்புவையர் - (ஆஸ்பிடி) (எண்ணிப்பார்க்க.) 6. சுப்பையரே ! கருப்பு !

சுப்பையர் - உபாத்தியாயரே ! கிளாவர் ஜாக்கி பிடித்து போதே ஒன்பது இறங்கவேண்டாமா ?

உபாத்தியாயர் - உமக்கென்ன ? எட்டாந்துருப்புப் போகாமல் பெரிது இறங்கலாமா ?

சுப்பையர் - உமக்கென்ன புத்திஇல்லையா ? துருப்பு நானல்லவா சொன்னேன் ?

(ஓர் சந்நியாசி வர)

சந்நியாசி - என்னையா தர்க்கம் ?

சுப்பையர் - வாரும் ! வாரும் ! நான் ஆட்டம் சொல்லியிருக்க, வாத்தியார் பெரிது கழிக்கலாமா ?

உபாத்தியாயர் - இரண்டடியின்றி யிருபத்து நாலா ?

சந்நியாசி - உமக்கென்ன? நீர் பெரிதாடவேண்டியது தான்.

உபாத்தியாயர் - சரி ! சரி ! நானும் துருப்பில்லாமல் இருபத்துநாலு சொல்வேன்.

சுப்பையர் - சீச்சீ ! சீட்டாட்டம் போதும். (சீட்டை எறிந்து விட) தபோதனரே ! வாரும் ! போவோம். (சந்நியாசி, சுப்பையர், ஏக)

உபாத்தியாயர் - நல்ல சாக்ஷி! நல்ல மத்தியஸ்தம்.

அப்புவையர் - நமக்கென்ன? நாம் ஏன் அப்படிச்சொல்லவேணும்?

உபாத்தியாயர் - அவர் சீட்டை எறியலாமா?

தீட்சிதர் - உத்தியோகஸ்தாள் அப்படித்தான். விளையாட்டில் கோபமென்ன?

(தெருவில் வழிப்போவார் வர)

சரி! சரி! இனிமேற் குறையேயில்லை! வைதீகாளும், லௌகீகாளும், மகாராஜாவும், சந்நியாசியும் கூதாட்டமானால், குடிகள் காரியம் கடைத்தேறிப்போயிற்று! சுப்பையர் சந்நியாசியை இட்டுக்கொண்டுபோனார். நாளை ராஜசபையில் சந்நியாசியைக் காணலாம்!

மற்றவன் - சீட்டுப்பழக்கம் நல்லதுதான். இஸ்பேட் ராஜாவுக்கு ஒருவன் மத்தியஸ்தமானால் ஓர் வேளை யுபகாரமாம்.

மற்றவன் - ஜாக்கிதான் மத்தியஸ்தம்!

(அனைவரும் ஏக)

## அரண்மனை.

(விராடராஜனும் மந்திரியும் பிரவேசிக்க.)

விராடன் — மந்திரி! திரிகர்த்த தேசாதிபதி
விந்தை யாக வெம்போர் புரிந்து,
விராட நன்னகர் விடாது கொள்வன்;
வேண்டும் படைகள் விரைவிற் சேர்த்துப்,
போர்த்தொழில் பயிற்றிப், புரசை மாநகர்
அணியணி நிறுவ, வாஞ்ஞா பிக்க.

மந்திரி — திரிகர்த்த, னின்னுங் கிராதரோடு,
மங்க வங்க கலிங்க கிடத
மாளவ யவன முதலா மரசொடும்,

யுத்த சன்னத்த ராகி, யிந்நகர்
இன்னற் படுத்த வெய்துவ, னதனால்,
படைக்குத் தக்க பிரதானி யொருவனைத்
தெரிந்து கொள்வது, திறமே சொல்லாம்.

விராடன் — என்செய் கோயான்! என்செய் கோயான்!
எம்பியர் பதின்ம ரினைத்தோ ; ரேனைப்
புதல்வ ரெல்லாம் போரினுக் கிளையர் ;
சுவேதச் சிறுவன் சூழ்கான் சென்று
மாதவ மியற்று, மாதிரை யாற்கே.
(சேவகன் பிரவேசிக்க.)

சேவகன் — திருவுள மிரங்தேன்! தொழுகுலத்தொருவர்
தந்த சீட்டிது. திருவுள மருள்க.
(சீட்டுக்கொடுக்க)

விராடன் — மந்திரி! யதனை வாங்கி யவிழ்த்து,
வரைந்த வனைத்து முறையே வறைதி!
எவரே விடுத்தா ரிச்சீட் டினையே ?

மந்திரி — நம்முட னவையிலாடு மையர்,
வந்தன மளித்து விடுத்த வோலையால்,
நற்றவ நல்லார் நமது திருவுளக்
கனியெதிர் பார்த்துக் கடிமதில் வந்ததை
யுய்த்துணர் பொருட்டு மெய்க்க,
வல்லாட் டெல்லாம் வல்லா ரென்றார்.

விராடன் — விபுதரை யிங்கே விரைவி லழைத்தி !
(சேவகன் ஏக)
(விப்பிரன் பிரவேசிக்க.)

வந்தனம், வந்தனம்! வருக, வருக !
சுதின மின்னே சோபனங் கடக்க!
பீடங் கொள்க! புனித முதல்வ !

விப்பிரன் — வாழ்க, வாழ்க ! விராடம் வாழ்க !

விராடன் — பூசுர நீவர பாக்கியம் செய்தேன் ;
சிலாக்கிய மடைந்தேன்; சிந்தனை வேறே

யிலதா யினு,மும தாசிரம மெவனே ?
திருவுள மென்னே ? தெரிகில னந்தோ !
குறிப்புணர்ந் தீதலே கொடைமற் றின்றெனச்,
சிறப்புட னூல்கள் செப்புந் திறத்திற்
பிறழ்ந்தே, னுளமொன் றேறிடு மையே !

விப்பிரன் — மன்னு! வென்னு சிரமமது சும்மாப்
பல்வேத் தவையிற் பயில ; வின்னே
யுன்வேத் தவையிற் சின்னுள் செலுத்த
வுன்னி வந்தே ; னேசனே வேறிலே !
கங்க பட்டனென் னுமங் ; கவறு
மாட லறிவே, னமைச்சு மாவேன்;
என்னே வுன்ன ? மேதோ வறியேன் !

விராடன் — எத்தனை நாள்க ளிருக்க விதமோ,
வத்தனை நாளு மதிபதி யாகி,
யேலா துளவே விதமாக் கொண்டு,
துணிவுறு கருமந் தோன்றச் சொல்லிச்,
சோர்வுறு காலஞ் சோரா தோடச்,
சொக்கட் டானுஞ் சுகமா யாடி,
யடியோ முய்ய வருள்தி ரடிகளே !

மந்திரி — புரவல ! வென்சிறு புந்தியி லொன்று
நிகழா வருமது ; நம்மைத் துனராங்
கீசகர் தம்முட் கிளைத்து சிங்க
பலனும் பட்டம் பெற்றுள கீசகற்
காதி பத்திய மளித்த னீகமேற்,
சிற்றா ருதவிச், சிறப்பி னேங்கச்
செய்திடி, னமது சேரலர் சோர்வரே.

விராடன் — உவகை யோடழைத் துதவுவ லின்னே!
பகைவர் பெரும்படை பற்றி யுடற்றப்,
பின்னே நின்று பேதுறு வண்ணம்,
முன்னே சென்று மோதுத றிண்ணம்.
ஆனு, லொன்னர் சின்னு பின்னப்

பட்டு வேறுப் பதறிப் போவர்.
இன்றே, யின்னு மேத முறுமே.

மந்திரி — நமது நன்னகர்ப் புறமுள, வெளியி
லொன்று ரெல்லா மொரும்பட வாறு,
ரென்று, வொற்ற னெமக்கறி வித்தா;
னெல்லா விடமு மெயிற்பொறி யேற்றிக்,
களரி முன்றுக் கைக்கொள லமே.

விராடன் — கீசக னேதிரி கர்த்த புரஞ்செல,
விளையோ ரிங்கக ரிருவழி காத்துத்,
திரிகர்த்தன் றுணையைத் தெருமரல் செய்ய,
ஏவுது ; மொல்லை யிரத மொன்று
கொண்டுத், தரனைக் கொம்மைப் போதிற்
கேகய மோடிக், கீசகர் நூற்று
நால்வரை யழைத்து நல்க, விடுப்பாய். (ஏக)

## புரவி வட்டம்.

உத்தரன் பிரவேசிக்க.

உத்தரன் — உடனே கேகய மோடிச் சென்று,
கீசகன் றன்னைக் கூட்டிக் கொணரச்,
சொன்று ரையன் ; சூதனைக் காணேன் !
இவுளியுங் காணே ! மென்னே செயலே !

சாரதி பிரவேசிக்க. .

சாரதி - தண்டன் சுவாமி !

உத்தரன் - இத்தனை தாமதமேன் பிள்ளாய் ?

சாரதி - பிழை பொறுத்தருள்க ! காற்றனைய வேகமுள்ள குதிரைகளைத், தாமக்கிரந்தியெனுமொருவன் தெரிந்தெடுக்கக், கொண்டுவந்தேன். ஒரு நொடியிற் கேகய நாட்டிற்கிரதஞ்செலுத்துவேன். ஐயம் வேண்டாம் ! ஆண்டவனே !

உத்தரன் - உனக்குமொராளா ? அவன் எங்கே ? பார்க்கலாம் ?

சூதனழைக்க தாமக்கிரந்தி பிரவேசிக்க.

உத்தரன் மனதில்

பிள்ளைப் பருவம்! பெண்ணுறு வடிவம்!
எள்ளா நடைதான்! ஏந்தல் போலும்!
கையுங் கயிறுங் காமுறு நோக்கும!
இல்லை யில்லை யிவனுக் கீடு!
மாவல னிவனே! மித்திர னெனக்கே!

தாமக்கிரந்தி - வந்தன மடியேன் வண்மைக் கரசே!

உத்தரன் - இரத சாரத்தியம் இயற்ற லாமா?

தாமக்கிரந்தி - சேவடி சகடஞ் சேர்த்து மானே!
தீவிர மோடத் தேரலா கும்மே.

(உத் - ஏறுக)

தேரோடு வண்ணம்.

உத்தரன் மனதில் பகர்க.

நரநர நரநர நகரம் நகரக்
கரகர கரகர கானகங் கானகக்
குறுகுறு குறுகுறு குறும்பு குறுகக்
கடகட கடகட கல்லுகள் கல்லச்
சரசர சரசர சாகர மோட
வருதும் வருதும் வானம தேற
மருதம் மருதம் மானவர் முன்னாத்
துரிதஞ் சரிதந் தோணிகள் சோரக்
கோணஞ் சதுக்கங் கோட்டி கடந்து
கேகய மோகையோ டோடிற் றம்மா!

சாரதி - ஆ! ஆ! தாமக்கிரந்தி வந்ததுந் தேர் சென்றதும், என் கர்வம் நின்றதும், சர்வம் போனதும் பலன்; ஆண்டு செய்தது, அணுத்தப்பினால் இல்லை! உலக வழக்கந் தானே! வரட்டுங் கேட்போம்! (ஏக)

# முதலங்கம். மூன்றாங்களம்.

## திரிகர்த்த தேசம்.

( நகர்ப்புறம். ) பேரிகை கோஷிக்க.

நீங் கிட்டாரு, செருப் பட்டாரு,
கடுகி காவல! வருதி! நீபொர.

திரிகர்த்தன் பிரவேசிக்க.

திரிகர்த்தன்.— என்னா வற்புத? யிந்த நகர்ப்புற,
மென்று மில்லா வியமெ மூந்தக
முழைய வாட்டி, யுரனறை கின்றது!
போருக் கழைக்கும், பேரி போலும்?
இவனூறு மொன்று, செவமோ யாவர்?
வாரா வல்லன் வந்தா னெனினும்,
வடக்கு வாசல் வந்த றனர
முறுக்கு, முரணுடை மன்னனை யறிவேன்.
மாளவ னந்தான், மச்ச நாட்டின்
ஆநிரை முற்று மடக்கிக் கொணர
வனுப்பி னேனே! யவனே, வாகை
பெற்று வந்து, பேரி யறைந்து
நாமெதிர் கொள்ள நின்று; னெனவோ!
என்னி, னித்தனை யிறுமாப் பென்ன?
ஊரா ரோடி யுளைய வேணுமா?
வாகை கறங்க, வழங்க வின்றி,
யாகவ மென்ன, வறைகி றானே!
தன்னை மறந்து, தலையில் லாமற்
றள்ளுகி றானே! தூமகேது!

## தூமகேது பிரவேசிக்க.

விராடம் போன வரலாறென்ன ?

தூமகேது - ( உரையாடாமல் துக்கிக்க )

திரிகர்த்தன் - ஆ! ஆ! லட்சணங் காட்டுகிறாயே !
வாயுள போதே யிந்தக் கோலமா ?

தூமகேது - மாளவ நண்பன் - (துக்கிக்க)

திரிகர்த்தன் - நண்பற் கென்ன ? நவில்வை யாவை !

தூமகேது - கற்கெதியடைந்தான் !

திரிகர்த்தன்- இழவுக் காகவோ விவணீ யணுகினை ?
மாளவற் கென்ன ? மக்க ளிலரோ ?
எள்ளு நீரு மிறைப்ப வானையோ ?
இங்கித ! முனக்கு, மங்கித மிலையோ ?

தூமகேது - ஆநிரை கொணர்ந்தே, னருளிய வாறே.

திரிகர்த்தன்- மாடு மேய்க்கு மடையனே, மாளவற்
கீடு கொடுக்க, வேற்பித் ததனு,
னுயிரோ டளித்து,நீ வுலக்கை போல
நின்று, யெதிரில் நில்லா தேபோ ! (ஏக)
நலமும் பொலமு நவியாத நண்பா
வுலகும் பொய்மா வுனக்குப்-பொலமும்
பிலமா மெனக்கினிப் பெயிறை யேய
வலமா மென துகல் வாழ்வு. (ஏக)

( மந்தைப்பேட்டை ) இரவு.

சேவகன் பிரவேசிக்க.

சேவகன் பாடுவது.
" மாவும் புள்ளும் வதிவயிற் படர,
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப "
மாக மலிந்த, மணியும் போக,
மாலை மல்கு, மாதர்
மாய்கையி, னிதய மகிழ் கொண்டற்றே.

யார் ! உஷார் ! யார் !

### தந்தரபாலன் பிரவேசிக்க.

தந்தரபாலன் - நான்தான் தந்தரபாலன்.

சேவகன் - தந்தரபாலனு? பார்க்கவொட்டும்.

(விளக்கிறபார்க்க)

(மனதில்) பாலன்தான்! அழகும் வடிவும், குழலுங்கையும், கோபாலன் போலிருக்கிறதே! இந்த மகானுபாவன், அர்த்தராத்திரி வருவான் ஏன்? விசாரிப்போம்.

அப்பா குழந்தாய்! தந்தர பாலனென்றுயே? மந்தரம் பண்ண மாட்டுவையா?

தந்தரபாலன் - மந்தரமுந் தந்தரமு, மிரண்டும் பண்ணுவேன்.

சேவகன் - எங்கே! ஒரு மந்தரம்போடு. பிறகு தந்தரம் பார்ப் போம்.

தந்தரபாலன் - இதோ பார்! ஆ! ஆ! (பூதியூதிப் புல்லாங் குழலூத)

ஹம்சத்வனி.

வாரா திர்மக ஜனங்களே! நீர்
வேணு மானல், விராடம் வாரும்!

(1) மாயா திபன், மோனமே மணம்,
மோன முற்றிர, வுறங்கு மினமுந்,
தூத ராகினம்; அகித மேகினம்;
விகித மாகு,நம் விசுவ மோகனம்- நீர்.

(2) மோன முரல்குழல் முனிவற ஊதினம்;
விநோதம் வந்தவித முறுரேக்!
க்ரமமா முளமோதுவம்.
ஏலா தாரே யிவணிரும்.
ஆன்வாரீ; ரம்வாரீ; ராகாதவம்!
மதன ஸ்வரூபம்! மந்தர மாத்தியம்!
அநந்தரம், அகிலதந்த்ர சாலம்!
விஸரவா யுறுவாம், விராட பட்னம்;

இருந்துள நாசம், ஏதுக்கு நேசம்?
இனிதுள நேரம், போவோம் வாரும்;
அநாதி யனுபவ; மத்புத தந்த்ரம்!
அம்சத்வனி பா டினதா நந்தம்-
(ஜனங்களெல்லாம் ஸ்தம்பிக்க பசுக்களை
விராடமோட்டிச் செல்ல.)

## அரண்மனை.

**திரிகர்த்தன், மந்திரி, பிரவேசிக்க.**

---

சூரியோதயம்.
பூபாளம்.

திரிகர்த்தன் காலை வணக்கம்: ஓசனித் தோதிம முபவ னச்சுனை
யாசனித் தேறு மரவிந்த மல்கவே
நேச னுதவன் நேமி யுதித்தனன்
ஆச பாச விருள்கெட மாறரோ.

**மந்திரி முன்வர.**

திரிகர்த்தன்- வேணு கானம் விநோத மாகக்,
கேட்கக் கேட்கக், கேளா மோ?வென
வேட்கை விஞ்ச, விஞ்சைய னொருவன்,
இரவி லிசைத்த, தென்னே கொல்லாம்?
மந்திரி - விராட னேவின விஞ்சைய னொருவன்,
வந்தி, ராத்திரி வற்சலங்களை
மரும மறிந்து, மந்திரம் போட்டுத்,
தந்திர மாகத், தொறுவ ரனைவரை,
யிந்திர சால மெனவே மாற்றிக்
கொண்டு போயினன், கோவிருந் தந்தனை
யென்று, விடைய ரிசைக்கக் கேட்டே,
னவரா லொன்று மாவ தில்லை;
விஞ்சை யறிந்தவர் வெல்ல நினைந்தா,
லெவரே கொல்லா, மெதிர்க்க வல்லார்?

திரிகர்த்தன் - திருடன்! திருடன்! தேர்ந்திலன் றருமம்
புருட னாகிற், போரினில் வென்று
கொண்டு வந்த கோக்களைக் களவா
யிரவிற் கொண்டிட, னேருத லறமோ?
எவரோ சொன்னா ரிந்தப் புத்தி!
நன்று நன்று! நிற்க நிற்க!
மோசம், நாசம் செய்வது நிசமேல்,
சாதல் பிழைத்த, லிரண்டல் லாமற்,
பொராது போகேன்; புலவர் கேண்மோ!
எழுமின் மள்ள! ரெழுமி னெழுமின்!
கள்ளனைக் கொன்று, காரிய மினிமேல்!

மந்திரி - சேனையை விரைவிற் சேர்த்து வருவன்!
போர்க்கோ லங்கொளும்; புனித விறையோ! (ஏக)

(திரிகர்த்தன் மனதில்.)

முத்துக் கிரீடம்! மோகன மாலை!
வச்சிரக் கவசம்! வாகு வலயம்!
சித்திரக் குடையுஞ்! சேர்ந்தொரு வில்லும்!
அத்திர மனேக! மயிலும் வாளு!
மழுவும் படைக, ளனைத்து மெடுத்துக்,
கச்சை யிறுக்கிக், கண்டை புனைந்துங்,
கரியும், பரியுங், காலா ளனைத்து,
மெதிர்கொள, வின்னு மேனோ ரில்லை!

மந்திரி சைநியத்துடன் பிரவேசிக்க.

---

மந்திரி - வந்தன மடியேன்! வன்புடை மன்ன!
விரும்பிய வாறே, வேண்டும் படைகள்
திரட்டித் தந்துளன், திருவுளம் போலத்
தேர்ந்து கொள்கத்! தெருமர லாமா
றருள்க! வின்னே யரைநொடிப் போழ்தில்,
விராட மோடி, வேண்டிட மலைந்து,
வம்பிற் பற்றிய வற்ச மனைத்தும்,
வீட்டுக் கருவம்! வெகுளி விடுமே!

திரிகர்த்தன் - சேனையைக் கண்ணுறச் சிந்திப் பகனு,
வானை, குதிரை, யானைத் திருவிக்,
தோற்ற, மேற்றத் தோன்று மாறு
செய்து, மந்திரி! செல்வ மாக!
எய்த்து மாழா, எதிலர் தாழா
வொவது சதமே!

மந்திரி — யாக்கைப் படியே,
அமைக்க! தலைவ! வணிபெற நிறுவி,
யிமைக்கு முன்ன, மெழிலுள வாகி,
யேகா வேகி, யேதிலர் வெறுவ,
வென்பொடு நின்று, வருவழி பாய்வமே.

தூமகேது - வலங்கொள! விரைக!

(மேளந்தொடங்க, படை கண்ணுற்றுச் செல்ல)

நோட்டி.

---

முற்ற முடியா மகிபதே-முந்து போரின் மோதுவம்.

1. மெத்த மெத்த மகிழுமாறு
மாறி, மாறி முந்துவம். (முற்ற)
2. கங்க பத்திரங் கதுவவே - காத மத்திர மோதவே
யாக மற்றுட னேகு பற்றலர் - யாக மீது மலியவே.
(முற்ற)

நகர்ப்புறம்.

நாயக்கன் சாரணன் பிரவேசிக்க.

---

சாரணன் - நேற்றுமுதலிதுவரைக்காத்து, மெதிரி படையெழுச்சிக் காணேம். எமது வரவறிகிலராமோ? ரணபேரியன்றோ வறைந்தோம்! கேட்டிலரோ? கேட்டுங் கேளார் போல வுளரோ? வலுவிலேக விதமல வென்னே? என்னில், நென்னற் பெற்றங் கொண்டது, வன்பினன்றோ? அக்கோலத்து, மாணவன் மடிந்தானன்றோ? இவை யாவு மியங்க வாய்ந்திலரோ? எது

காறு மிவணிருக்க! எழும்! எழும்! எந் தலைவற் குறைப்போம்.

நாய்க்கன் - அப்படியல்ல. எம்மை ஏதிலர் வரவுரைக்க வேவினை மையால், அவர் வரும் வரையில், இவணின்றுணரா தேக, லகிதம்; எள்ளளவும் சரியல்ல! அதான்றி, யா மிப் பகல் முழுதுமட்டு, நிற்கவேண்டும். வேறு வேவு வந்து விடுத்த பின், போவது கடமை. விரைந்தார் வறியரென்பது, வாய்மை ஆகலின்,—

சாரணன் - அண்ணே! ஆங்கு தோன்றுவ தென்னே?

நாய்க்கன் - இளவெயில்! எமக்கேது மியங்கவில்லை! சற்று நிதானித்துணர்வோம்.

சாரணன் - அதோ! கோகு வரையில், மின்போன்றொளித்தல் பாரும்!

நாய்க்கன் - தொலையாடி எடுக்க.

சாரணன் - இதோ காணும்! (ஆடியீய)

நாயக்கன் - நில்! நில்! கொடுஞ்சிமான்றேர்! குடை! படையாக!—

சாரணன் - அதோ! ஆகாயத்திற் சிறுபடம் போலும்?

நாய்க்கன் - படைக்கொடியாம்! பற்றுரென்னப் பண்புறும் நோக்க! இவுளியேறி, யேகுவமாக!

(குதிரையேக, விரைக)

(கீசகன் படையோடும் வர.)

மேளம், நோட்டு.

---

பட்டும் பட்டும் பண்பிலரோ?
பொருதும் பொருதும் புகழ்பெறவே?
இன்னன்றோ? வெம்மிறையே!
யியன்ற கால! மெழில்பெறவே!

நாய்க்கன் - கோகு வரைக்கட் கோமளமா
மிளிர்படை மள்ளர் மொகுமொகென
குடைகொடி யுடனே கடுகிவரக்,
கண்டே னடியன் கேசரியே! (பட்டு)

கீசகன் — மூரசு மறைந்தும் மூட்டாண் மன்,
வருபவ னல்லன் வருகர வைச்
சாரண னென்னிச் சேர்ந்தனனாற்,
காரணங் கண்டேன் கடிதுடனே. (பட்டு

நாய்க்கன் — காப்பு சூழக் காவலரா
லகமும் புறமு மற்றற்றே
பெய்த்துப் போக விடம் வருமா,
லிவணுறை வம்மே, யெழில் பெறவே. (பட்டு

கீசகன் — பக்கம் பக்கம் பலவிடமும்
போக்கும் வரவும் பொலி வறவே,
பற்றப் பற்றப் படைவரு மேற்,
சுற்றிச் சுற்றிச், சூழ்குவமே. (பட்டு

நாய்க்கன் — ஒருசா ரா ரிருசா ரா,
ரோடி யொளித்தே யுடற்றினதும்,
பின்பற்று, முன்பற்றிப்,
பதைக்கப் பதைக்கப், பறக்கழிப்பம். (பட்டு

கீசகன் — நேத்தி! நேத்தி! நாயகமே!
யொருகுறை யில்லை, யுசிதமதே!
யுபாய வணி! யுடைந்திடுக!
பாக்கியம்! குப்த! மாசிடவே. (பட்டு

(இருபடைகளும் சந்தித்து யுத்தம் செய்ய அவ்வவர்

மேள முணர்த்த.)

திரிகர்த்தன் — சேர்ந்து தெளிய லாகுமோ?
தேசிகன் றிற மேருமோ?
ஆசுகப்பல, வீசு மந்திர,
வார்வ மார, வதிர விரதம். (முற்ற

கீசகன் — சார்ந்தும், சார்ந்துஞ், சகடமெலாம்
பேர்ந்தும், போர்க்தும், பொடிபடவே,
மந்திர முற்று, மழுங்கிடவே,
யந்தர மாடுக, பம்பரம் போல் (பட்டு

4

திரிகர்த்தன்— கருவி மாறி யாவுமோ?
கயங்கள் பலவுங் கடுகுமே?
புயங்கொ ளங்குசம் புதைய, விஜயபச்
சிதையச் சிதையச் சேர்த்து நிறுவ! (மூற்ற

கீசகன் — தும்பிக் கையுந் தோளுமெலாங்,
கொம்பொடு பறியக் கொடுங்கதையாற்,
கொட்டிக் கொட்டிக் குவிபஞ்சா,
வெட்டிய தட்டு மிதமெனதே! (பட்டு

திரிகர்த்தன்— தூசிப் படையுந் தூரத்துமே!
வாசிப் படவும் வேணுமே!
பூசிப் படையப், புகழுமேவாடி,
மூசி மூசி, மொய்ம்பி னோர்த்து. (மூற்ற

கீசகன் — வாசி யனைத்தும் வலியழிய,
வாய்க்கடை ஞாணின். விவிதமெலாம்
பற்றிப் பற்றிப் பதறிடவே,
யெற்றிக்கொல்லு, மிதமெனதே! (பட்டு

திரிகர்த்தன்— தொட்டு விட்ட வத்தி ரத்திற் றெட்ட
சட்ட கம்மெலாங்,
கட்டு விட்ட மற்று ரத்திற் கற்ற
கற்ற கல்வியான்
மெச்ச விச்ச கத்த கத்து மெச்சு
சுத்த வீரரே
நச்சு பற்ற லர்க்கு மெத்த நச்செ
னப்பொ லிமனே. (மூற்ற முடிய

கீசகன் — தேர்ந்து தேர்ந்து, சார்ந்து சார்ந்து,
நேர்ந்து நேர்ந்து, பறவை சூழுங்
கருவிமாற, மூசிநொந்து,
வாணிவாடி, வானநோக்கி,
எனவே எது! வெல்லவல்லா,
ரில்லே! யில்லே! யேந்தல் வாரு!
மென்ன, வின்னல்! சொல்ல மீறி,

யேகும்வகை யின்றி, நிற்க!
வெஞ்சரங்கள், பாயப்பாய!
வஞ்சியமூ மரவமேகி,
வஞ்சியர்கண் ணீருருக்க!
வல்ல லுற்றுப் போன்றுமாறு,
வெற்றி யெற்றிப் பெற்ற போது,
விருதுகூற லாகுமே,
லென் சமர்த்து, மன் சமர்த்தும்,
வெட்டவெளி பட்டிலாவும்.
இட்டமுட னெம்பியர்காண்!
மன்னன் படை வரமறைந்து,
நின்றுகாப்ப ணோரமயங்,
கதுமெலவே கவிந்துகொண்டு,
பற்றிப்பற்றிச், சுற்றிச்சுற்றி
யெற்றி யெற்றி, யேமலோகம்,
நோக நோக நல்கி, நீவிர்
ஒன்றிமன்ன ரோடவோட,
வோடி யவ ருற்றநகர்
முற்றுகைதா னிட்டவுடன்,
வழிப்படுவர் வேந்தரெல்லாய்;—அதனால்,
வாகை சூடி, விராட மேவுதும்!
வேந்தும் வியந்து பொலியு மாறே.

[கீசகன் திரிகர்த்தனை முறியடிக்க]

திரிகர்த்தன் தனித்தேக } கானெரி துற்றென ஏசக னிப்படி காதிம லைத்திடவும்,
மானகி லைத்திலர் சாபமெ டுத்திலர் வாளிதொ டுத்திடபர்ஞ்
சானன முட்கின யானையெ னப்பொலி வற்றுப டுத்தனரால்
ஆனன மற்றவ மங்கலே யெனிருந் தென்னப யன்னினியே? (ஏக

## இரண்டாம் அங்கம்.

### முதற்களம்.

### விராட சபை.

விரடன் - மந்திரி - கங்கபட்டர் - சபையோர் பிரவேசிக்க

**விராடன்** — மந்திரி கேளாய்! மன்றார் வளநக
ரிரவிற் புகுந்தொருவ னிருந்தானா மற்றவன்
தொத்தொடு இளந்த தேன்மொழி தானென்
[னேயோ?
சிறுகுழலி னினிதமைத்த விறும்பூதமெ
[தென்னேயோ?
வறிகல! மாநிரை வரக்கண்டே, குடிகளெலா
மோடினார் கூடினா ராடினா ரவனுடனே!
யானுந் தெருமந்து பார்ப்பேமா பலகணியி,
லன்றாயன்றா! யானைத்துமச் சிறாருவற்
கமையு மமையு! மென்றேறா னென்னுமே;
யவனை விளிக்கக் குடந்தயா றூரெலாங்;
கலனளவு கலனளவு சுரும்புலவு நறுந்தொடை
வேய்ந், தம் மகற்கு விருப்ப மளித்து,
நந்தனன் மனைக்கு நண்ணுறி, ரென்றேன்,
பொதுவர தாநிரை போற்றிக்கொணர்வா
ரிதுவரைக் காணே னியம்பு!

**மந்திரி** — பொறுமையுள பூபால! போர்புரிந்து
பெற்றமதைக் கொணரா முன்னந்,
திறமையுள தந்திரத்தான் மீட்டவகை
யுணராமற் கீசகன்றான்,
விறற்படையோ டடியெனவே வார்ப்பரி
த்து நின்றனனோ? வலிதன்றி,
விறல்பெற்றும் வற்சலங்கள் காணாமன்
மாழ்கினனோ? வறிகிலேமாற்,

றரிதமுள தூமொன்று போய்மீள நல
மே சொல்லாம்,
சரிதமுள சார்பிலரே! சொல்லித்தேற்றும்,
வரவுன்னி வரைபெண்ணும் வருத்தம்போக.

கங்கபட் — பெரும துயருமேழல்! பேர்பெற்று மன்னர்
வருவ ரொருநொடியில்; வாளாவிளையுரை
போக்க னலமன்று; போன வொருவனைக்
கூவல் குணமன்று கொள், - மறவர்
எள்ளளவு மபசெய முருருண்மை,
துணைவேண்டிற் றாது வரலிங்கு நிச்சயமே.

விராடன — முனிவர! தமது திருவருட் படியே,
வழிசெல னன்றல வெனுமெழி கேட்டேன்,
பரிபவ மற்றேன், பணித்தி ரடிகாள்!

கங்கபட் — புரவல! கேளப், பெரிய சுசர்மற்
கரச ரனைக ரளியுண்டால்,-உரமுடைய
புத்திரரை யேவிப் புரிசை நகர்காத்த
லுத்தம மன்னோ வுரை-சிலவேளை
துணைக்கும் பணைக்கு மாவர்
நினைக்குக் தருணத்தி நிற்குந் திறமையினே.

விராடன் — துணைவ! தேர்தியேற், றூய நன்மொழி,
சென்று சிறூர்க்குச் சேவ்விஇற் கிளந்து, நம்
செல்வ மாநகர் சிருடன் காத்துத்,
தெம்முனை யகற்றித், தீராவேசமாய்
வதிக! வென்னுநம் மாசி வழங்குதி.

மந்திரி — ஏகி யவர்க்குரைத் தெய்துவ, னிறைவ! (ஏக.

விராடன் — அடிகண் முன்னு ளருளின வாறு [ளுய்;
கழங்கு விளையாடல் காணே னொருநாள்
கழங்கு விளையாடல் காணக்
கிருபையுளவே லிப்போழ்து கிடைக்கலாமே.

கங்கபட் — தலையோகுங் காரியங்கள் தாம்பலவே யானதனுல்
இலையோமற் றிவர்க்குத்தொழி லென்னுரா?
[வியம்பரசே!

விராடன் — தலைபோகுங் காரியங்கள் தாம்பலவேன்.
[முனிக்குமரை
இலைமேலோங் துளியளவென் றெண்ணுறார்?
[விருந்தவரே!
(கழங்கு ஆட)

சேவகன் பிரவேசிக்க.

சேவகன்- திருவடி தொழுதேன், திருவுளமருள்க!
(ஓர் கடிதம் கொடுக்க)

விராடன்-இஃதார் கொடுத்தார்?

சேவகன்-திரிகர்த்த னேவிய தூதனொருவன்.

விராடன்-இவணழை யவனை.

சேவகன்-இன்னே கொணர்வ, னென்னாண் டவனே!

திரிகர்த்த சேவகன் பிரவேசிக்க.

திரிகர்த்த சேவகன்-சரணம், சரணம்! சர்வ தயாபர
விராடன்-திரிகர்த்தனேவ, வேலினை யென்ன?

திரிகர்த்த சேவகன்-ஆம், ஆம்! அடியேற் கருள்செயு மாறு.
விராடன்-சுசர்மன் சுகமே கொல்லாம்? சொல்க!

திரிகர்த்த சேவகன்-திருவுளமுளதே, உய்வதுமாகும்.
விராடன்-ஓதுவ விதனை யோதி யவைக்கண்.

ஓதுவான்-(கடிதங்கொண்டு படிக்க)

மதிக்கு நேர்முக மாகவே பிறந்து,
விதிக்கு வீழ்ம்முக மாகவே வதிபத்
துடிக்கு, மென்மன மாறவே, பெரிய
முடிக்கு நும்மண மிழிங், தொரு மொழியே
தருமெனி, னித்துய ரேனை தாகப்,
பொருது கீசகன் போரினை மாற்றி,
யுரைவழி யுய்க்க வுடம்படு மொருதூ
துரைக்க வேற்கு முண்மை யாகவே.

விராடன் — பண்டித! விதற்குப் பிரதி மொழியாத்
தூதேற் குவமெனுந் துணிவே வரைக.

கங்கபட் — இறையே! யதுபோ லெழுத லிசையன்

றறைபோக் கடித்த வவர்க்கு-முறையே,
யவரோ டியாத்த லழகென் றெழுதத்,
தவரா துளக்கருத் துத்தான்-அதனால்,
ஒன்று நுடம்படி லுய்வர்,
இன்றே, விகல வியம்பல் வேண்டா.

விராடன் — நன்று நன்று! நவின்ற, தடிகாள்!
வென்று நின்றார் வேண்டின வண்ண,
முடிக்கு மாறு, மேன்மைப்படுத்தி,
வாசக மொன்று வழங்கி யருண்மே.
ஓதுவ! மாதவ ருரைக்கு மாறு,
நன்றெ ழுதி, நம்முன் வைக்க.

(கங்கபட்டர் சொல்ல ஓதுவான் வரைந்து இறைமுன் வைக்க)

சுசர்ம! வுந்தன் சுவபாப மெமது
வழிப்பகை யாக வைகுவ தாயினும்,
"அன்பிற் கடைக்குந்தாழில" தாலுன்
னிருக்கையு நிலையு மிம்முறையெண்ணிப்
பொருந்தன மாகப்! போர்வல கீசக
னுரைமேற் கொண்டுட னுடம்பட் டுறைதி!

விராடன் — பண்டித! முத்திரை பதித்து, விலாசம்
வைத்து, வேந்தற் கியுமாறு
சொல்லிக் கொடுக்க, சேவக னிடமே.

ஓதுவான் — சேவக! விதையுன் செம்மற் களித்தி. (கொடுக்க)

தி. சேவக — கருணைக்கடலே! கடிதங் கொண்டேன்;
விடையுங் கொள்வேன், விமல விறையே! (ஏக.

மந்திரி பிரவேசிக்க.

மந்திரி — புரவல! யானிள வரசர்த் தொழுது
திருவாக் கறிவித், தின்னகர் காக்க
வெழுவது கண், டிங் கெய்தின னடியேன்.

விராடன் — மந்திரி! யென்னு மதியாச் சுசர்மன்
மதிக்கு மாறு மம்ம ரிழைத்து,
நம்மைக் கெஞ்சி நலம்பெற மாட்டிச்

செம்மை நமக்குச் சீருட னுதவி,
யிம்மை மறுமை யிரண்டினும் புகழ்பெறச்
செய்து வைத்த, செம்மல் சீசகற்
கென்ன கைம்மா றியற்ற வுளது?

மந்திரி — இறைவ! வெத்தனை யியினு மமையு
மாகவி, னம்பி னறிந்தவ ராகி,
யவைக்கு ளொழுந்தரு ளடிக ளருளாத்,
திருவாக் கேற்பத் தேர்ந்து முடிந்த,
னலமென் றடிய னறிவ, னுதனே!

விராடன் — தயாளி தே! தஞ் சரணு ரவிந்த
மகிமை யெம்மால் மொழிய வாமோ!
என்றெம் மவையி லெழுந்தரு ளாச்சோ,
வன்றே யமைக்கேதா மனமில பாக்யம்;
ஆகவி, னடியேம் சீசக விறைக்குச்
செயுமுப சாரஞ், சிறக்க வருண்மே.

கங்கபட் — நகரி கோலஞ் செய்து, திருவிழா
வயர, சல்லா பத்துட னெதிர்கொண்,
டிறைக்கு வேண்டு மெல்லா வைபவ
முறைக்குச் செய்து, பவனி வந்து,
கூடவுண்டு, கூடின வளவி
லிருக்க மந்திர மியற்றி யளித்துச்,
சிற்றா ருதவிச், சீரெலாஞ் செய்ய
லறமே யாதலா, லியற்றல் கடனே.

விராடன் — அவையோ ரனைவரு மறிமி! னதுபோ
லின்று முதற்கு வென்றித் திருவிழா
வயர்ந்து, நிதமு மானந்த மனுபவித்
திருந்து, சீசகன் வரவு பார்த்துச்,
சிறப்பெ லாஞ்செயச் சேர்மின்! சேர்மின் !

அவையோர் —
அந்தர முந்தின சுந்தர மந்திர மிந்த்ர லோகமொ டிந்துறு முந்
துறு மந்தம்-குலே கழைகதலிகள் கோலம்,

எங்கணும் விஞ்சுற மந்தியுந் தந்தியுஞ் சிந்துகோலமுப-வனமெ
ன வழகுள வாக!
சுந்தர மிஞ்சின மங்கையர் தம்மொடு மூழ்ந்து மோகமொடுவந்து
கலந்துறு மைந்த-ரமுதுணு நடமிடு மோதம்,
எங்கணும் விஞ்சுற வம்பரம் வந்தென நம்பு மாறுநவ-விதமுள
விழவயர் வாக! (ஏக)

உத்தியான வனம்.

விருதசாரணி பிரவேசிக்க.

விருத — மன்னன் றேவி மகிழு மாறு,
மாலை தொடுக்க வேண்டின மலர்கள்,
இப்பூங் காவி, லெல்லா நலனொடு
மிருக்கக் கண்டே னுக! விவ்வனம்,
இமையவர்க் கியற்றிய தென்னே வறியேன்?
செங்கா லனமுஞ், செம்பொற் பெடையும்,
கொஞ்சிக் கொஞ்சிக் கூடுங், கமல
மலர்விரி பொய்கை மனோகர மாகக்,
குயிலுங், கிளியுஞ், சிகியும், முகியுஞ்
சிறகர் சிலிர்த்துத், தண்சினை தவழ்ந்து
மென்கனியருந்தி, மெதுவாகக் கூவச்,
செய்துவர் குன்றிற் சோர்ந்த நறும்புனல்,
மென்மலர் வளர்த்து, மதுவா வழிய,
மதுகர மயின்று, மதுவடை தட்ட,
மூழ்கி வந்து, மிசைந்திளைப் பாறச்,
சொல்லுஞ் சொல்லுஞ்! சோபனச் சோலை!
யாகவி, னிதனின் றிளமலர் கொய்ய,
விதமே யல்லா, லேது மிலையே. (மலர்
கொய்ய)

(உத்தரை, சுமதி, சுசீலை, இவர்கள் பிரவேசிக்க)

சுசீலை - நேற்று நாம் வந்தபோது நாவற்பழம் பழுத்திரு
க்கக் கண்டோமே! இன்று நமது உத்தரை வந்திருப்பதால்,

MAHAMAHOPADHYAYA

கொஞ்சம் உதிர்த்துத்தின்று, பூப்பறிக்கலாம்.

உத்தரை - மரம் எங்கேயிருக்கிறது? இதுவரையில் நான் பார்த்ததேயில்லை.

சுசீலை - அதோ! அந்தக்குளக்கரையிற் பூத்துக்காண்கிற பவள மல்லிகை யருகில்.

உத்தரை - ஓ! தெரிகிறது! போவோம்! (பழம் நுகர)

சுமதி - அம்மா! அதிகம் தின்றீர்களே! நெஞ்சு கட்டும். நேரமாயிற்று! அம்மாள் கோபித்துக்கொள்வாள்.

உத்தரை - பூப்பறிக்கவேணுமே! மல்லிகை மொட்டுக ளைக் காணவில்லையே! யார்பறித்தவர்?

சுமதி - சற்று எட்டிப்போனால், வேண்டும் மலர்களுண்டு விசாரமேன்? (எட்டி ஏக)

உத்தரை - இந்த வாடாக்குறிஞ்சியின் நனைகளைக்காண வில்லை! கிள்ளினது கிள்ளினாற்போலேயே இருக்கிறது! யாரோ இப்பொழுதுதான் பறித்திருக்கிறார்! இந்த வண்டு என்ன வண்டு சும்மாத்தொடர்ந்து தலைக்கேறுகிறது! புப்பறிக்க வொட்டுவ தில்லை! (மலர் கொய்ய)

சுமதி - அதோ! அம்முல்லைக்கொடி வளைகிறது! யாரோ பூப்பரிக்கிறார்!

உத்தரை - ஆம் ஆம்! யார்? பார்த்துவா!

சுசீலை - ஆமாம்! உத்தரை மாமியார் ஒளித்திருக்கிறாள்!

உத்தரை - காற்று சங்கையிருப்பதால் காண்கிறதில்லை! செவ்வையாய்ப் பார்!

சுசீலை - ஆம், ஏடீ! சொன்னாற்போலவே ஒருத்தியிருக்கி றாள்! இங்கே எப்படி வந்தாள்?

உத்தரை - அவள் கையில் அழகான மாலை இருக்கிறது! வாங்கிக்கொண்டுவா! சு. செல்ல.

விருதசாரணீ - யாரம்மா நீ?

சுசீலை - நான்தான்! மந்திரிமகள்; எமது ராஜ குமாரி

உத்தரை, யுமது கை யாலேமேல் மோகித்தாள்.

விரதசாரணி - இன்னும் சற்று தொடுக்கவேணும்; நான் மாலைதொடுக்கத்தான் வந்தேன்.

சுசீலை - ஆனால் வாரும்! நாங்கள் எல்லாரும் மலர்பறித்துக்கொணர்வோம்; நீங்கள் ஒருபுறமிருந்து தொடுக்கலாம். (எல்லாவரும் மலர்கொணர விருதசாரணி தொடுத்து ஈய.

உத்த - நாரு றித்திள நீர்ந னைத்தெழி ஞை தொய்யக மாகவே

சீரு ருக்கொள மேய பற்பல சிக ரம்மிகு சாலகம்

ஊரு நத்தினங் காலு முத்தினம் வாரி மொத்தின வாறெனம்

போரு கத்துறை மாது மெச்சின போதி லம்பக மானதே!

ஆ ஆ! நன்றாயிருக்கிறது! நாகர் ஜடைவில்லை நவரத்தினத்தால் இழைத்தாற்போல் இருக்கிறது! சுமதி! இதை எப்படித்தலையில் வைப்பது? சற்று வைத்துவிடு!

சுமதி - இதுமாத்திரம் வைத்தால் எப்படியிருக்கும்! ஜடை சிங்காரம் செய்துகொண்டால் தேவையில்லை!

விருதசாரணி - அம்மா, உத்திராய்! உட்கார்; தலைபின்னிப் பூத்தைத்து விடுகிறேன். (புனைக.

சுமதி - சுறுக்காப் போவோம் வா

( சுதேஷ்ணை பிரவேசிக்க )

சுதே - கண்ணே! இத்தனை நேரமென்ன? காணேமென்று ஓடிவந்தேன்! திரும்பம்மா, பார்ப்போம்! ஆ! ஆ! நன்றாயிருக்கிறது! இது யாரம்மா தைத்தவர்?

சுமதி - இந்தச் சோலையில் கந்தர்வ மாது போல் ஒருத்தி வந்தாள்: அந்த அம்மாள்-

சுதே - எங்கே! எங்கே! போய்விட்டாளா? அந்த அம்மாளை ஏன் மனைக்குக் கூட்டிக்கொணரவில்லை? வா! போய்ப்பார்க்கலாம்! (விரத-யைக்காண.

ஏனம்மா! சங்கோசமென்ன? நமது அந்தப்புறத்திற்கு

யாரும் தடையின்றி வரலாமே! குழந்தைகள் கூப்பிடவில்லையா? அவர்களுக்கென்ன தெரியும்! வாரும் போவோம். (அனைவரும் ஏக.

## மூன்றாவது களம்.

நாடக சாலை.

தீக்ஷிதர், சந்யாசி, இவர்கள் பிரவேசிக்க.

தீக்ஷி - இன்று ராஜக்கிரகத்தில் போஜனம் வெகு பசந்தாச்சுது!

சந்யா - உமக்கென்ன! சர்வதா சாப்பாடுதான்!

தீக்ஷி - அதென்ன! அன்னம்பிரம்மமயமல்லவா?

சந்யா - பிரமை யென்று சொல்லும்!

தீக்ஷி - பிரமை விட்டால் பிரம்மந்தான்!

சந்யா - வாஸ்தவம்! கொஞ்சம் அதிகமாய் விட்டதாற்றான் இப்படி இருக்கிறீர்! இன்று சமையல் விசேஷமென்ன?

தீக்ஷி - தாங்கள் எல்லாம் விட்டதாற்றான், சுரோத்ர சூட்சுமமேயில்லை! ஓர் பரதேசி பாடுவதைக்கேளும்!

அமுதோதன மமுதேயென வருந்தப்பல கறிகள்
இனிதோவினி தெனத்தின்பன வெல்லாமப ரிமிதம்
கனிதேனொடு கற்கண்டுபால் கிருதம்மிகு சரிதம்
கமலாசன னொரு காலமுங் கதிக்காவித முறவே.

சந்யா - நன்றாகப் பாடியிருக்கிறான்! யாரப்பா இவ்வளவு பசந்தாகச் சமைப்பவர்?

தீக்ஷி - பலாயனன் என்னும் பரிசாரகன்! இன்று நமது உற்சவத்துக்கு வந்தான். அவனது கைபாக விசேஷத்துக்காக அக்ரசாலை ஆதிபத்யம் அளிக்கப்பெற்றான்

சந்யா - ஆ! ஆ! அதிபாக்யவான்! குட்டுப்பட்டாலும் கனியா ழிக்கை கொண்டு குட்டுப்படவேணும்! பரிசாரகத்வம் ஆனாலும் ராஜானுக்ரகம் விசேஷமல்லவா? அரமனைச்சம்பளம் அரைக் காசு ஆனாலும் அதுக்குச்சமானமுண்டா?

தீக்ஷி - அடடா! இதென்ன இப்படிச்சொல்லுகிறீர்? பா

கசாஸ்த்ர பரிக்ஞானியல்லவா? அந்த ரசமே ரசம்! அந்தச் சமையலே சமையல்! அந்தக்கையே கை! அசாத்யம்! அசாத்யம்! ஒரு கொப்பரி ஜலத்தை ஒரே கையாலெடுத்து பந்தி முழுதும் கங்காமிருதம் சேட்கிருனே! அவன் சமர்த்தை என்ன சொல்ல!

(சேவகன் பரிமளத்தட்டுடன் பிரவேசிக்க.)

சேவகன் (ஓர் புறம்)- பார்ப்பாரப் பையன்கள் பிதுங்கத் தின்று பிதற்றுகிருர் போல இருக்கிறது!

(வெளிப்பட)- சத்து!

தீக்ஷிதர் - ஏதடா நீ யிங்கே வந்தது?

சேவ - சுவாமி! தண்டம்! இன்று சதிராக உத்தரவாயிருக்கிறது. ஆனபடியால் இந்தப்பரிமளத்தட்டு கொண்டுவந்தேன். ராஜா இப்போ வருவார். உத்தரவு! இதை இவ்விடம் வைத்திருக்கிறேன். (தட்டு வைத்து ஏக.

சங்யா - ஓய்! தீக்ஷிதர்வாளே! உமக்குக்கொண்டாட்டம் தான்!

தீக்ஷி - அது என்ன?

சங்யா - திரயமேத யக்ஞம்!

தீக்ஷி - திரயமேதமா? ஏது நூதனமாய்ச் சொல்கிறீர்? மறைவென்ன? சும்மா சொல்லுமேன்!

சங்யா - மறைவு ஒன்றுமில்லே; சகஜம்தான்! உமக்கே தெரியும்! வேணுமானல், சொல்கிறேன்கேளும்!

(திரயமேத விதி)

இளங்கொடி யீன்ற யிளைய வெள்ளிலே
புனன்மீ னுகுத்த பூகச் சுருளும்
முத்துச் சுண்ணம் முகில ளாவிய
பொதும்பர்ப் பட்ட பெருஞ்மண மாலும்
[illegible]

பச்சைப் பூரம் பனிநீர் பெய்து
பரிமள வாடை பரிந்து வீச
ரமணீ கரமாந் திரயமே தம்மே.

தீக்ஷி - ஆ! ஆ! சித்ரம், சித்ரம்! சொல்லும், சொல்லும்! இன்னொருவிசை கேட்போம்.

சங்யா - கேட்பான் ஏன்? சம்சயம் வேண்டாம். யதேஷ்டமாகத் தாம்பூல தாரணமாகட்டும்! உம்! உம்! போஜன சேஷம் பூர்த்தியாகட்டும்!

தீக்ஷி - (பரிமளத் தட்டைப்பார்த்து) - ஆ ஆ! ரொம்ப விசேஷம். "பூகிபலசமாயுக்தம் நாகவல்லி தளேர்யுதம் கர்ப்பூர சூர்ண சம்யுக்தம்" இதென்ன! ஏலம், கிராம்பூ, ஜாதிக்காய், ஜாதிபத்ரி, வால்மிளகு, குங்குமப்பூ!- இதென்ன? சந்தனம்! பனினீர்விட்டு பச்சிலை கர்ப்பூரம் கஸ்தூரி சேர்த்திருக்கிறது! உம்! உம்! நல்லவாஸனே! நல்லவாஸனே! வெகுசுகம்! வெகுசுகம்! ஔதும்பர பத்ரமிருந்தால் அதி சிலாக்யம்!

சங்யா - ஓய்! ஓய்! தீக்ஷிதர்வாள்! ஆநந்தத்தில் அழுந்தி அவதும்பர பத்ரத்தை யழைக்காதேயும்! உமக்குவேண்டும் ஆநந்த பத்ரம் என்னிடத்திலிருக்கிறது. வாரும்! ஏதோ சந்தடிகேட்கிறது! சீக்கிரம் வந்துட்காரும்! (அமைதியுடன் இருக்க.

## விராடராஜன் வைபவத்துடன் பிரவேசிக்க.

சேவகன் - வழி! வழி! விலகு! விலகு! உம்! உம்! விலோ! விலோ!

விராடன் - சேவக விந்தச் சிங்கா தனத்தை
மாதவாரவர்க்குத் தருதி! (சேவகன் எடுக்க விரைவில்
(அளிக்க.

கங்கபட்டர் உட்கார்ந்து-
சித்திரப்படங்கள் சிறந்து விளங்க
வெத்திறத் தோரு மிறுமாப் படைய

நற்றிற முளரிங் நாடக சாலை!

விராடன் — உத்திரை பிறந்த நாளினி லுவந்து
இத்திறச் சாலை யேற்பித் ததனு
லிப்பொழு தவணன் னடனம் பயில
வாய ஐய!

கங்கபட்டர்— விகிதம்! விகிதம்!
வேண்டது தானே!

மந்திரி— விமல வாரிய!
அவிநயர் தமக்கினி தருளி னவர்கள்
நவின நடனம் செய்வர்.

கங்கபட்டர்— நல்லது!

விராடன்— சேவக! சந்தனம் சிந்தாதெடுத்து
மந்திரி கைக்கொடு! மகிழ்ந் தெல்லாரும்
தரிக்கு மாறு தாம்பூல மளிக்க! (மந்திரி சந்தன முதலியன ஈக.

தீக்ஷிதர்— கொஞ்சங் கூடக் கொடும்!

சந்யாசி- கூசாதேயும்!
எனது பங்கும் கூட இருக்கட்டும்!

(எல்லாரும் சந்தன புஷ்ப தாம்பூலம் புனைக.)

(நடனம் தொடங்க. வாத்தியம்.)

(பிரகந்நளை, உத்தரை, கோமளை, சுமதி, முதலாயினர் பிரவேசிக்க)

கோமளை - நீதான் போவேன்!

உத்தரை - நன்றாயிருக்கிறது! நான் மாட்டேன்.

சுமதி - சுருதி சேர்த்தாய்விட்டது! கோமளாய்!
இதென்ன தர்க்கம்! நாம் கற்றதைக் காணவன்றோ, ராஜன் விஜயமாயிருக்கிறார்?

(கோமளை நடனம் செய்க.)

இராகம் - வசந்தம். - ஆதிதாளம்.

இங்கித லீலாமிர்தம் - வேணு
சுந்தர காரு மிர்தம்.
மந்தர மானஸ தந்தர வைபவ
விச்சின் னௌபாஸன வேதாந்த விசுருதம்- (இங்

பிரகந்நளை - அம்மா உத்தராய்! தாமதமேன்? பெற்ற தகப்பனரிடம் குழந்தைகள் தாம் கற்ற வித்தையைக் காட்டினலல்லவா, அவர்கள் மிகவும் பிரியப்படுவார்கள்! ஒன்றும் சிந்திக்காதே! சீக்கிரம் வா!

(உத்தரை நடனம் செய்க.)

இராகம்-கல்யாணி. ஆதிதாளம்.

நீ இஇ-இ இவர மனிமதன கோபாலா அ அ
அ அ இப-சுபகதி தருவிமல (நீஇ)

1. கா அ அ-மா-காரா
பீ-மா-காரா
ஸ்ரீங்-காரா
லீ-லா-பே-தா (நீஇ)

2. மாய மாகிமன மாகி யாதிறுரு
மாதி யாகியறி வாகி நீதமுறு (நீஇ)

3. ஸ்ரீஇஇ இஇகர நளின தளநய-ரு
மிருது வசன தருணியி தரமண
தவசர ணவிணைக டாரம லடியனே [விட,
விட ரெனுகினைவு வரவுபா யமளி (நீஇ)

4. நீஇஇஇ யிதமுடனெனை யினுமணையா அஅ
அஅவிதமுனுப காரமல ராமவினிவா துபுரி
யா அது வரல நீதியல தாகுமது மணமா அஅ,
யதுகுலப் ரியமுக விமலவி கிதசுக
சுருதிமுர ளியமிர்த காரு லோல (நீஇ)

சங்யாசி — கா-ளு-மேலா-லகீஇ (இருபக்கங்களிலும் சிரக்கம்பனம்செய்ய)

கீசுகிதிர் (பக்கத்தில்) — ஹா! ஹா! என்னரஸம்! கால் நாலாலுல் ஓலமாகத்தானிருக்கும்!

ஓய்!ஓய்!ஒரே இழுப்பாக இழுக்கப்போகிறது! சற்றுசிதானிம்!

சேவகன் மறைவில் } இராகம்-யமுனா. ரூபகம்

"ப்ரேமை மீருது-கிருபை பாரடி.
பெண்ணே-ரதிக், கண்ணே."

கீசுகிதர்- சாபாஷ்!

ஹா! ஹா! சித்ரம்! சித்ரம்! பாட்டுப்பாடினுல், இப்படிப் பாடவேணும்! சபாஷ்! சபாஷ்!

சங்யாசி- ஓய்! ஓய்! ராஜசபை! கொஞ்சம் ஞாபகமிருக்கட்டும்!

கீசுகிதர் - சரி! சரி! சங்யாசியோடு சேர்ந்தால் சர்வமும் தத்தம் பண்ணிவிடவேணும்!

சேவகன் - சத்து!

விராடன் — பார்க்கப் பார்க்கப் பக்குவ மாகப்
பலிப்பதாலிது பாடினர் யாவர்?

உத்தரை — பிரகன்னளை யெனுமிப் பேதை பாடினள்;
தாளத்தோடே தானவ ளியைபின்
எதில ரிவளை யெதிர்ப்பது மரிது!

விராடன் — உத்தம ரேயிம் முத்து வடத்தை,
யுமது கையா லுபசர மாக,
பிரகந்நளை யெனுமிப் பிரியை கழுத்தி
லணியும்! (கொடுக்க)

கங்கபட்டர்- அம்மா! அன்புடன் கைக்கொளும்!
(ஆரம்போட

(ஓர் வீராவேசம் கேட்க.)

முண்டாத்தட்டுதல்-டாட்டா!

வீரதொனி-யாஅஅஅஅஅஅஅஅர்
போஓஓஓஓ-உய்!
(எல்லாரும் வியந்து வெளிவர)

அரங்கத்திற்குப் போம் வழி.

ஜனங்கள்-பிடி! பிடி! அடி! கட்டு!
சிலர்-பாபி! பத்துப்பேரைக் கொன்றான்!
விராடன்-அரவமென்ன வறிந்துவா சேவக! (சேவகன் ஏகி வர)

சேவகன் — வாசவ னென்னொரு மல்லனா-மவன்
யாசகம் செய்வனா மல்லையே-யதி
லேசகம் செய்தவ ரில்லையா-மினி
யோசனை யென்னமோ சொல்லையே!

விராடன் — அற்புதம்! அற்புதம்! ஆனந்தவடிகாள்!
என்னு மில்லா திப்போ தியங்க
என்ன செய்வேம்? எமதறி வின்றிச்
சமர்த்த னாகச் சமரே செய்யச்
சொன்னார் யாவர்?

மந்திரி - சோதனை செய்து
சீக்கிரம் சேர்வன். (தெருவில்)

(பலாயனன் சட்டுவமெடுத்து ஓட)

பலாயனன் - சொல்லச் சொல்லப்
போகாமற் போக்கி நித்தனங் காட்டவா!
சட்டுவ மெடுத்துச் சமர்த்தெலாஞ் சரியப்
பல்லை யுதிர்த்துப் பருந்தாட் டாட்டிக்
கொல்ல வல்லா ரில்லை யென்றா?

தெருவழி ஒருவன் - இவனென்ன மடையன்! என்கால் வீணா நசுங்கிப்போயிற்று! இவனை யென்ன வெட்டிக் கொண்டு போகிறது? என்ன ஆத்திரம்? அரமனையாளென்றால் இந்த கொம்பா? மந்திரிவருகிறார்! மாட்டிவிடுகிறேன்.

மந்திரி — நீயே னிவிடம் நின்று நவிந்தாய்?

ஒருவன் — சுவாமி! சுவாமி! சட்டுவமெடுத்துப்
பலாயன னோடே, யானுமோடி
யவனைப் பற்ற, வென்னை யவனும்
விரலை யழுத்தி, விரைவிற் போனான்!

மந்திரி திரும்ப - பிரயவர மகிப! பலாயன னிப்போ
சிலகத் தோடே சேர்ந்தா னென்னத்
தெருவழி யேகத் தெரிந்த செய்தி
யறிந்து வந்தேன்.

விராடன் - அனியா யம்மே!
இனிய வடிசி லினியார் செய்வர்?
வீண்வம் புக்கேன் வெருவிச் சென்றான்?
நமனுக் கிரையா நாச மாவனே!
பாவம்! பாவம்! பரிசா ரகனே!
விரைவிற் போவம், விபுத வரசே!

கங்கபட்டர்—பொருதிறவீரன் போர்செய் தாலும்
வருகிற விதிதான் வழித்தங் கும்மோ?
பலாயன னின்றிவ னுயி யழிப்பன்;
பரிபவம் வேண்டாம் புரவல!
மடையனை யறிவேன்; மற்போர் புரிவன்.

விராடன் — என்னி, னினிமேற் றாமத மின்றி
யரங்க மனைதும், அனைவரு மாக. (அனைவரும்
வர.

(மற்போர்க் களம்)

வாசவன் — நில்! நில்! நானொரு நல்ல புத்தி
சொல்வது கேட்டுச் செருசெய லாய்நீ!
சட்டுவ மெடுத்துச் சமைக்குந் தொழில்விட்
டிப்போர் புரிய வெவரே யேவினர்?
உன்னுட னெதிர்த்தா லுலகோர் சிரிப்பர்!
உயிர்மே லாசை யுள்ளது நிஜமேல்,

ஒன்று மூன்று தோடிப் போநீ!

பலாயனன் — மட்டுகள் சொல்லின் முட்டாளே! யுனை
விட்டே னல்லன்! துட்டப் பயலே!
பொட்டா வுன்னைப் புடைத்துப், பறக்க
விட்டாற், பாவ மொட்டிக் கொளுமோ?
முட்டியு முரனும் மூடிக் கொள்நீ!
மூத்தா ளுன்னை முகக்கப் போராள்!

வாசவன் — மிச்சந் தின்னுங் குச்சப்பயலே!
அச்ச முறுமிவ் வடியினை மாற்றி
விட்டுப், பின்னர் வீரம் பேசே! (மற்போர் செய

அரங்கத்துளார் (தம்மிற்புகல.)
கரகர வென்று சாரிகள் சுற்றக்
கடிதொடர் கையைக் கட்டி யிழுக்க!
நிலத்தை யுதைத்து நிமிர்ந்து குனிய!
வலசார் காட்டி யிடசா ரகல!
வாசவன் முதுகுதை யுண்டது வுண்டது!
பிடித்தான் மடையன்! பின்கட் டாகக்
காலைத் தட்டிக் கடுகி யடித்தான்!
மருமம் பாய்ந்தான் மடையன் றனே!
(வாசவன்-வீழ அனைவரும் எனுமிச்சம்பழ மெறிந் தார்க்க)

விராடன் — பலே! பலே! பலாயனு! சபலம்! சபலம்!
கைகொடு! இந்தா கனக வளைகள்.
(கைகொடுத்து வளையீந்து தேர்மேல் வைத்துச் செல்ல)

3837

# மூன்றாம் அங்கம்.

## முதற் களம்

விராடபுரம். சித்ர வீதி. இராஜசபை.

கீத நாமாவளி.

மோகனம். வாத்தியம். கீசகன் வரவு. உத்தரன் எதிரேற்றல்.

கீசகா கீசகா - கம்பீர கேசரி
கீசகா கீசகா - கன - கம்பீர கேசரி கீசகா

உத்தரன் — மாதுல! வாதுல மகன்று மகிழ்ந்தேம்
போதுள பொன்னி புனையெழின் மார்பிற்
றுதைந்து தவழ்ந்து வருத்து மருத்தியால்
நிச்சலு மும்மை நினைந்து நினைந்து
நேர்கொள நின்று நமஸ்கரித் தேனே. (தொழு)

கீசகன் — அப்பா குழந்தாய் ஆண்டாண்டு வாழ்க
இப்போதுனைக்கண் டென்சிரம மிழந்தேன்
விஜய வைபவம் விரும்பிக் கொணர்ந்தேன்
விராட மெல்லாம்

அனைவரும் - விஜயம்! விஜயம்!
(கரகம்பனம்.

விராடநகர் மகாஜனங்கள் சாற்று
வாகைமாலை.

ஓதுவான் — இந்த விராட மிருக்கு மெளியேம்
உய்யு மாறும் முயர்பெருங் கருணையால்
அற்புத வடவி னடுகளம் புக்குத்
தப்புதலின்றித் தரியலர் சோர
வென்ற வீரக் கழலினாய்!

எமத றிக்கை யிஃதிலை கேட்டி.

2. தென்ன லறைபோய சேரலான் றிரிகர்த்தன்
இன்னல் விளைக்க வெண்ணி பொருக்கால்
இன்னு மிவனுறி னெம்மாண் பழியும்
ஆகலி னின்னக ராரிட மென்ன
எண்ணி யிருக்க வெமத பேட்சையால்
உபேட்சை செய்பா தோகை யோடருண்ம்.

3. நுடவை தன்னி லுயரா மண்டபம்
அரங்கோ டனைத்து மணிபெறச் செய்துளேம்.
இயன்ற வேளையி லவ்விட மணைந்து
போர்த்தொழில் பயிற்றி யுமேதவர் படையென
எம்மருஞ் சிறுவரை யிபக்குதி யளியால்.

4. வழிவழி சிறந்து வாழ நந்திறல்
பொலிக பொலிக புவன மனைத்தும்
மலிய வாயுள் மால்செஞ் சீறடி
மனதி லுன்னி னேமருள் கூறுமே.

5. இருக்கையு நிலையு மீங்தெமைக் காத்த
செருக்கை நினைக்கச் செயுஞ்சீ ரெல்லாம்
எள்ளள வாயினு மிதமுட னேற்றுக்
கனித்தருள் கேசரி. (முருகேந்து வாகைசூட)

அனைவரும். விஜயம்! விஜயம்!

சீசகன் — நகருளோ ரெல்லாம் நல்கிய சிறப்பு
மறப்ப தன்றுன் மொழிந்தவை யேதும்
அரசோ டாய்ந்தினி தறைவே னுக.
என்று மும்மது வாழ்வினை யெண்ணி
வேணது புரிவன் விடையளித் தருளிர்

மந்திரி — பொன்னி னேடை பொலிவுறு புகர்முகம்
மன்ன னுணையின் முன்னித் தந்தேன்;
திருவடி தொழுதேன்; தேவரீர்
இறையவ னவைக்க ணெழுந்தரு ளலாமே.

கீசகன் — உவகை யுடனீ யோதின படியே
ஏகுவ மமைச்சே.

மந்திரி - பாகமே கொணர்க.

(மாதர் ஆரதியுடன் பிரவேசிக்க.)

மாதர் ஆரதியெடுக்க

மாதர்க் கழகு மணதி லொன்றுங் களங்க மிலாமை
நீதம் நீதம் நிறையைப் போக்கின் நிலையும் மில்லாது
ஏத மேது மெமக்கி லாம லென்று மாவாயேல்
மாத வனருண் மலிய நலமோ டென்று மாளாமே. (மாதர் ஏக)

(இராஜசபையிற் கீசகன் பிரவேசிக்க பவனிகோலத்துடன்.)

விராடன் — குளிர்கன் முரசங் குழைய மலிந்த
புகழ்பெறு கேசரி புகர்முகம் பொலிய
வீற்று வருகை யேற்றுச் செலவு
விகித மாக விற்பன ரேபுடை
சார்ந்து பெருகச் சயமே! ஜயமே!
விராட மனைத்தும்
{ அவையோரனைய அரசன் சென்று
அஸ்தலாகு கொடுத்திரங்கச் செய்ய.

அனைவரும் — விஜயம்! விஜயம்! (கரகம்பனம்)

மைத்துன வெத்துணை யாயினு மழியா
மித்திர ரல்லார் மிடற்றிற முடித்துப்
பத்திர மாகப் பரிவுட னிங்கர்
தழைத்தெழுங் தோங்கத் தந்த வயப்போர்
கேசரி யேசரி! கிளர்செங் கரங்க
டந்தவை சேர்ந்து தளர்வெலா மாறக்
கூட வுண்டெனைக் குளிர்வித் தருள்க.

கீசகன் — வருத்தி யருத்தியால் வெஞ்சம ருழல
வருளிய வேளையா லனைத்து சிறப்பும்
பெறவென விருந்ததும் பாக்கியப் பெருக்கே!
யாகவி னைத்துணை யேவினு மதற்கோ

ஸீ ச க வ த ம்.

ரப்சிய னல்லே னருட்பெரு மானே!

* ஊன் *

விராடன் — பலாயனு!

பலாயனன் — இதோ படைத்தே னடியேன்.

கானப்ரியன் — ஏமத் தாலம் இதமா யளித்து
விமல வமிழ்தும் வியப்புறு கறியும்
நறுநெய் பாறயிர் நவில்சிற் றுணவும்
நல்குற வின்றி நல்கிய சிறப்பு
திக்குத் திகந்தமுந் தேக்கிய தென்னே!
கௌஸ்துப மணியுங் கோவிந் தார்ப்பிதம்!
(எல்லோரும் கோவிந்தா! கோவிந்தா!)

போசன மானதும் பூஞ்சாந் தணிந்து
பனிநீர் பையப் பெய்திரு மொகரத்
தணிமணிப் பிலிச் சிறுகாலாடிப்
பெருமண முறுமணப் பொருதும்பர்ப் பொருளுடன்
மென் பட்டிலேயு மிசைந்திளப் பாற
மெல்ல மெல்ல மேலவை மல்கவே.

விராடன் — மந்திரி முன்னர் மொழிந்த போல
விந்திரச் சாயன் மந்திரப் பாக்கம்
அமைந்துள தோசொல்?

மந்திரி — அமைந்தது முன்னே!
இமையாதவரு மிமைக்கு மணிகிளர்
பட்டின மாடு முட்டின பொழிலும்
அரங்கச் சாலே யாலய மனைத்தும்
எட்டின மட்டும் எண்ணுற் றேனியான்
அழகுட னமைந்துள ததிசய மன்னே!

விராடன் — இந்நகர் மேவு மனைவரு மினிமேல்
நன்னய முதவு நம்மைத்துனராம்
கீசகக் கேசரி இளர்வயப் போரில்
மன்னிய சிறப்பு முன்னி யேபெற
விதமுறு நாம மாலை கதம்பெறச்
சேர்மின் சேர்மின் செவ்விதி னுரைப்பாம்:—
நாமமாலை (நாதநாமக்கிரியை)
சொந்தமெனச் சொந்தமெனச்
சொந்தமெனக் கொண்டனந்தம்
பத்திரத்தோ டிச்சகத்து
ணிழல்வதா னெகிழ்ந்த சுகம் — வினைவாக
நத்திழைக்கு முத்திழைத்த
சத்திர வித்தாரனையே
நித்தமு முத்தரிக்க நேரும்மே. (குடையிக)
பௌவமென வாக்ரமித்த
தெவ்வர் செவ்வி வெளவுமொரு
செவ்வனேங்கிச் செல்லுமாபோற்
காம்பிழைத்த கம்மிழைக்கும் — அடையாளம்
கொத்துடன் குலைந்தபுட்பம்
பத்திரம்பு னைந்தவயப்
போத்திருந்து பொலியுமாறே. (கொடியிக)
கல்லடல்க லைத்தவன்கைக்
கெல்லெழிலி றுத்தமணி
கொல்லரத்தங் குழித்திட்டு
வில்லெனவ ளைந்த வந்தம் — அணியாக,
வப்பனைய ழித்துமகன் நட்பினை யந்தமுகம்
செப்பனிட்டுச் சேர்ந்தவந்தம்
ஒப்பனை யொழிந்தகய முந்தவே. [விருதனிக
காருடன்க லங்கி யேகிச்
சுடருடன்சு ளிந்து தாழும்
அலருடன திர்ந்து வாழும்

பேருடன்பெ லத்துலாவும் — பெயர்நாடு,
வற்புறுத்தித் தற்ப்ர காச
மற்புதத்தோ டார்த்திபெற
வெற்பிருத்த மேவியென்னும் வாழவே (தானமீக
இந்தநக ரெக்கழுத்தஞ்
சேர்ந்ததொரு சொற்கழுத்தம்
வாசகம்வ ளர்கழுத்தங்
கீசகங்கி ளக்குவித்தம் — என்னைகாண்
பாசனம் பரவுபடைக் கோசனைத் தலைவனாக
நேசன் கீச கனைநாம
கேசரி யென்னுவாமக் கிழவோனே (கேசரிப்
பெயர் மானம் புனைக) (எல்லோரும் கரகம்பனம் செய்தேக)

## இரண்டாங்களம்.

அந்தப்புரம்

(சுதேக்ஷணை, உத்தரை, கோமளை, சுமதி, விருதசாரணி, சுசீலை, இவர்கள் பிரவேசிக்க.

சுதேக்ஷணை — வாசவ னென்ன வந்த மல்லனை
நாசம் செய்வோன், நமது டுக்களைத்
தலைமை மடையன் றுனென, விறைவற்
குரைத்த தேவரே? கோமளாய் மொழிமோ.

கோமளை — வேத்தவை தன்னில் வியன்முனி யட்டன்
நேத்தி யாக நவினன் மொழியான்
மற்போற் கியைந்து மாலைசூடினன்.
கண்டேன் கண்டேன் கவினுறு காட்சி
என்றற் சொலவு மியலுமோசொலும்?
மடையன் வரவும் மல்லன தழிவும்
கண்டேனல்லாற் காணே னென்றுமே!

சுமதி — நென்னல் மடையன் கல்கிய வமுது
இன்னு மெவர்க்கு மெய்துத லருமை

அருமை அருமை யைங்கறிச் சுவைதான்
மன்னவை தன்னின் மடையன் வரவு
பெரும்பே றென்னப் பேசலாமே.

சுதேஷ்ணை — அடிசிலமைதொழிலாக்கலு மன்றிக்
கடிமணச் சுவைபல கோலிற் சேர்த்தென
வொருபகல் போலபற் பகலு மமைவது
மற்புதமன் றோ வமைத்தோ ளிகளே!

சுசீலை — அடிசிலமைப்பதி லதிசய மென்ன?
அதேதொழி லாக வாண்டாண்டு பழகி
யுளனுற் றேர்ச்சி யுற்றுள னன்னே?
விவேக மேதும் வேண்டா வித்தொழில்
மடைய ரனைவ ரித்தொழில் வல்லார்;
கோமளை குறித்த காதியு மதுபோற்
றினமு மற்போர்த் தொழில்செய மிகுமே;
சத்திர வித்தையு மத்தன் மைத்தே;
அத்திர மென்னி லதிசய விஞ்சை;
யதுமொரு வேத மெனுமே யுலகே.

சுதேஷ்ணை — சுசீலை சொன்ன சூழ்ச்சி யேசரி!
சுராசுர ரெல்லாஞ் செய்தவம் பலவா,
லொப்பிலா வத்திர முதவப் பெற்றுப்,
போர்த்தொழின் மிக்குப் புகழ்பெற லானு
ரென்னக் கேட்டுளோ; னின்றுமெ னெம்பி
கீசகன் வரவுங் கெட்டான் றிரிகர்த்தன்;
இல்லெனி னெத்தனை யிகழ்ச்சி யுறுவேம்!
அரசியல் போகி யாட்கொள நிற்பேம்!
அத்துணை யெம்பி யித்துணை காறும்
பிறப்பொன் றுளதாப் பேணின னல்லன்
வரவுங் காணேன் வெகு நாளாக!

உத்தரை — அம்மா னடிகள மேகுமு னெனக்கு
ஆடல் பாடற் கமைந்த பலவுங்

தப்புத லின்றித் தருவே னென்னச்
சொன்ன சொற்றுன் சேட மாச்சுது.

சுசீலை — அம்ம! கேளா யம்மா னனைத்துந்
தந்துள னெனவா தோரணர் சொல்லக்
கேட்டே னின்னுமென் னையறூற் பலவுந்,
திரிகர்த்த தேசம் போனது முதலா
நிற்கவு மிருக்கவு நேரமே யின்றி
நேர லாரை நெருக்கு மூபாய
மிரவு பகலா யெண்ணின றுறன்.
உம்மிட யோக மூபார வுமூன்று
வென்று வந்து வேனுடம் பாடு
யாத்தலி னித்தனை யாகிய மென்ன
வறிந்தே னுகவே வம்மா னைச்சொல
ஏதுவுங் காணே னெல்லா ருக்கும்
முக்கிய மாக வன்னையை வேண்டிச்
செயம்பெறு மாறு செய்த தொன்றுமே
பெருழும்பே றென்னப் பேசலாமே.

உத்தரை — நென்னற் கனவு மதுவே யாகி
கண்ப டாதெரி கண்ணுற் றேனியான்.
எல்லவன் வந்து மெழுந்தே னல்லன்;
சரீர மெல்லாஞ் சடசடப் புற்றேறன்.

சுதேஷ்ணை — விருதசா ரணியே வேண்டின மலர்கள்
கொண்டு வந்தென் னுருயிர்ச் சிறுவிக்
களித்தி யென்னி ஞகந் தணியும்.

விருதசாரணி — வேண்டின மலர்கள் விரும்பித்தருவேன் — (ஏக)

சுதேஷ்ணை — குளிர்ஙன் மருதங் குழைந்து வீசப்
பீலியெடுத்துப் பனிநீர் பெய்துக்
கொணர்தி கோமளாய் கோகில மொழியே.
(உத்தரையை நோக்கி)
சின்னு ளாகச் சிறந்தநம் நகரில்

எல்லா நாளும் மந்த மாருதம்
வன்னக் கிளிகள் வளர்கின்ற
சின்னச் சோலைச் சிறுமுல்லையின்
பெருமணம் பெற்று
வந்தே னென்ன விவரிக்க,
சந்தோ ஷத்தொடு சுரும்பர்ப்பெண்கள்
மஞ்சு லாவிய தேம்படி மஞ்சனம்
விஞ்சி யிறைக்கையில்—
கன்றினை தேனடி கண்ணே மணியே!

சுமதி — அம்ம கேளா யம்மா னுனக்கு
வேணா வேணா வைபவக் கருவி
யாடற் பொருட்டுத் தந்து ளானைல்
கொணர்வ னேகிக் கோகில மொழியே. (ஏக)

(புறங்கடை கீசகன் சேவகனுடன் பிரவேசிக்க.)

கீசகன் —சுமதி, சுதேக்ஷணை சுகமே கொல்லாம்?
சுமதி —சுகமே!
கீசகன் —சுமதி யேகுவதெங்கண்!
சுமதி —உத்தரை மகளுக் குதவு பரிசு
கைத்தல மூளதோ கேசரி யன்னே?
கீசகன் —கொணர மறந்தேன், கோயில் சென்று
மேனிலை யறையின் மல்கிய மணியாழ்
பாங்கர்ப் பயிலும் பல்லவை யேனம்
எல்லாம் கொணர்தி! யேகுக, சேவக. (சும-சே-ஏக.)
வருமள விந்த வாயி லிருந்து
சிறுகா லாறிச் சேருவம் வரவே

(விருதசாரணி மலர்கொய்து வர)

நடி —பிடிபோ லடிபெயர்த்துப் பெருமையயர் தயர்ந்தவ்
வடிமே லருள்பெய் தாஇசிறு பொற்கொடிபோற்
றலைசாய்ந்து தனையறிந்து தண்ணனைகள் தாங்குகர

வஞ்சியே வஞ்சியே மென்மேனி யார்பரவ
வெய்துமோ வில்லையோ வென்றயர்க்குஞ் சிற்றிடையாள்
எய்தின ளெய்தா விதம்.

கீசகன் — புயலோசெறி குழலோபொரு மயிலோ வரு மயிலோ
கயலோகவர் கண்ணோநடை கனமோகன தவமோ
இனமோவிவ ளெனதாருயிர் நலமோ நினை மனமோ
எனமோவென வினவேனருண் மானேயெனைக் காவாய்!
இக்கோல மொழிந்தென்னித வெழிற்காதலி யாக
மிக்கோரெனு மிக்காருனை யெக்காலமு மெச்ச
வைப்பேனென துயிரேதிரு வாய்விட்டொரு சொல்லே
யிப்போதரு ளெப்போதுறை மாதேமருண் மடந்தாய்!

விரு-எப்போதுமுன் னெண்ணம்மது தப்பேதரு மமன்றால்
இப்போதெனைக் கைக்கொண்டவ ரைங்கின்னர ருளரால்
செப்பாமொழி செப்பல்லது சம்மைக்கெனுஞ் சிதைவே
வப்பாலரும் பழியாமது நப்பாசையா னைசம்

கீச — அஞ்சாருயி ரன்பர்களை யணைதல்லது கற்போ?
கெஞ்சும்மெனை மிஞ்சும்முன தஞ்சொல்லரு ளாமோ
எஞ்சாதென துயிரேயினித் தஞ்சம்மெனை வாழ்வித்
தெஞ்சும்படி யருளாய்கிளி கொஞ்சுங்கனி யதரம்.
[தழுவவர-ஓட]

சுதே-என்னேயெனு மில்லாததோ ரெழுமல்மக ளேயுன்
மின்னேயொளிர் முகமுற்றிலு முத்தேபொலும் வியர்வை
பின்னேயுறழ் சோக்கம்பெரி தகமுற்றிலும் வெதிர்வு
என்னேயிஃ தென்னேயிது மென்பாலுரை யாயே!

விருத- அன்னேயரு மலர்கொண்டிவ ணணுக்கும்முன மனுசன்
இன்னேயெனைச் சுட்டிப்பல சொல்லாவுரை சொன்னன்
நன்னேயது நன்னேயது நவிலாய்விதி வசத்தாற்
றன்னேயுள ளெனுமெண்ணமிற் றாழ்வும்முனற் பாலோ?

சுதேக்ஷணை— அம்மா பொறுபொறு. அஞ்சா தேநீ,
சும்மாச் சொல்லல சொல்லலு மாமோ?
கேட்பேன் கண்ணே கீசகன் வரவே
காப்பே னுனைநீ கவலைகொ ளாதே.
அம்பொன் மெத்தையி லணிமலர் பரவி
யுத்தரைக் கின்ன வுபசரிப் பாயே. (விருதசா
ரணி மலர்பரவ ஏக)

[கீசகன்-சுமதி இவர்களாடற்கருவி தராதுவர]

சககின் — பொருத்தரு ளக்காள் பணிந்தேன் பெருநாள்
போர்த்தொழி லாகப் போயின, நேற்று
வேண்டு சமாதா னத்துடன் சேரார்
ஏகின ரின்றிவ ணெய்தினன்;

சுதேக்ஷணை:— இருக்க!
நன்று நீதான் நல்கினை யாக!
உன்று வின்னக ருயவே யாக!
தன்வினை தன்னைச் சுடுமெனு மொழிநீ
யுணர்வை யென்னினு யலா கும்மே.
இத்தனை யேற்றம் பெற்ற வெனக்கோர்
பெண்சொற் புத்தி பேணலு மாமோ
வெனுமே மாப்பா விகழ்ச்சி செய்யேல்;
உடன்பிறப் பாதலி னுறுதின; னுனக்கிஃ
தோதின னென்று ஓரஞ் சொல்லேல்.

உத்தரை — அம்மாள்! உரைத்த தறிகல னிப்போ
சும்மாவிருந்து சேரலா மென்று?

சுமதி — அம்ம! உத்தராய்! அவசர மாமோ?
செம்ம லம்மான் செய்துள தெல்லாஞ்
செவ்விதி னிப்போ தறிய லாமே

(கீசகன் மனதில்)-எல்லா வருமின் றிணங்கிய போல

என்ன வென்னை யேமாற் றுகிறார்?
யானு மிவர்பா லனவா காமோ?
இவ்விட மினிசும் மெண்ண முடிக்க
வேற்ப தன்று லேகுவ மனைக்கண்.

சுமதி — கீசக வம்மான் கேட்டிலன் போலும்?

கீசகன் — உங்கள் கோட்டி யொன்றுமே யுணரேன்.

உத்தரை — ஆடற் கருவி யனைத்துந் தருவே
னென்று ரைத்த தென்னே சொல்லாம்?

கீசகன் — சேவக னைத்தான் கொணர விடுத்தேன்.
இன்னு மவன்வரக் காணே, னேகி
யானே தருவ, னிக்கண மம்மா. (எக)

(மனதில்) ஆடற் கருவி யனுப்புவ தன்றி
யவ்விட மேக லயுக்த மினிமேல்;

சுதேக்ஷணை மனதில் } கீசக னென்மேற் கோபங் கொண்டு
போயின னென்ன வாய்கிறே, னென்னிற்,
றுமத மின்றித் தன்முகம் வேறு,
யென்ன வென்ன வென்மகள் கேட்க,
வன்ன வன்ன வன்பொ டுறைக்திலன்.
என்றே டேதுஞ் சொல்லா தேகினன்.
இஃதவ னெண்ண மிதமல வெனுமே!
யாகலி னின்னு மென்ன வென்ன
கூத்துக ளாமோ! குவலய மெல்லாஞ்
சிரிக்க வெம்முடன் சேர்க்கை விடுமோ
வறிகில; னிதற்கோ பெண்ணுப் பிறந்தேன்
அரச னென்ன வறைவா னந்தோ!
வண்ண மகளின் வாய்மையை யென்சொல!
விருதசா ரணியா மென்பது வாய்மை!
அவனுயிர் காப்பா ரெவருங் கூடிற்
கீசகன் கெடுமே! யெமக்குங் கேடாம்
எப்படி யாயினுந் தப்புத லரிதே.

பாபி யானே னிரவு மொழியா
தேங்கி யயர்ந்தே னென்செய வம்மா !

கூனி பிரவேசிக்க.

கூனி - மகராசி யாத்தா !

சுதேக்ஷணை - ஏது இத்தனை நாளும் வராதவள் அதிசயமாக வந்தனை ?

கூனி - என்னம்மா சொல்ல ? ஏதோ இத்தனை நாளும் உங்களால் வீடும் விளக்கும் வச்சிருந்தேன். இப்பொழுது அதுக்குச் சனி பிடித்தது.

சுதே - என்ன சமாச்சாரம் ?

கூனி - என்னம்மா சொல்ல ! எனக்கு எழுபது வயசாச்சுது. இந்த மாதிரி வரும் என்னு விசாரிக்கவேயில்லை.

சுதே - நீ சொல்வது தெரியவில்லையே ?

கூனி - என்னம்மா சொல்ல ! நீங்கள் நன்னாயிருக்கவேணும். ஏதோ ஆயிரங்காலத்துப் பயிர்.

சுதே - விவரமாய்ச் சொல்லேன் !

கூனி - பெரிய எசமான்காலத்து இருந்த இருப்பென்ன ? அதை எல்லாம் அழிஞ்சுபோனவன் கெடுத்தானே. இப்போது விடிஞ்சும் விடியாமற் போச்சே. உங்கள் எசமானை எத்தனை நாள் மாரிலும் தோளிலும் வளர்த்தேன். அவுக நன்னாயிருப்பது எல்லாருக்கும் இளக்காரமாச்சே ?

சுதே - என்ன நேரிட்டது ? அவருக்கு வந்தது எனக்கு வந்ததல்லவா ?

கூனி - அதுக்கென்னம்மா சந்தேகம். புகுந்த வீடு நன்னாயிருந்தால் பெத்தவீட்டில் பிரியமுண்டு. அதுவும் அப்பன்

ஆத்தாள் இருக்குமட்டும்தான். அண்ணன் தம்பிக ளுக்கெப்படியாளுலென்ன? அவுக பாடு அவுகளுக்கு ஊரெப்படியாளுலென்ன? ஆறெப்படிப் போளுலெ ன்ன? நேரமாச்சுது நான் போய்வாரேன்.

(போக எத்தனிக்க)

சுதே - கூனி! கூனி! நில் நில்! எங்கே போகிருய்? ஒன்றும் சொல்லவில்லையே.

கூனி - என்னமோ உங்கதம்பிக்குப்பூ வேணுமாம், அதுக்காகப் பூங்காவனத்துக்குப் போகவேணும்.

சுதே - இப்பொழுது இவிடம் புஷ்பம் வரும், கொண்டுபோக லாம். நீ என் வயது காலத்தில் அத்தனை தூரம் போகவேணும்? வண்ணமகள் வரும் நேரமாயிற்று.

கூனி - வண்ணமகளை நான்பார்த்ததேயில்லை. அவள் எவ்விடம்? இங்கே வருவானேன் தெரியவில்லை.

சுதே - அவளுடைய நாயகர்கள் ஐந்து கந்தருவர் என்ன இவ்வி டம் ஓர் விருதமனுஷ்டிக்கற்பொருட்டு வந்திருக்கிருள் இதோ வருகிருள்.

( விருதசாரணி பிரவேசிக்க )

---

கூனி - அம்மா! நினைக்க நினைக்க நூறுபிசு. ஆயிரங்காலமிரு க்கவேணும். பெண்ணைப் பறிகொடுத்த பாவி நான். இந்த வயசிலாருமில்லா தேங்கித்தவிக்கலாச்சே. உன் னைப்பார்க்க என் மகளுடைய நினைப்பு வருகிறது. கொடுத்துவையாக் கொடும்பாவியானேனே. இப்பொ ழுதிருந்தால் இவ்வளவு தூரம் பூவுக்காக வயசு கா லத்தில் வரவிடாளே. என்செய்வேன் என்தலையெழுத் திப்படியா. என் கண்ணே! என்னைத்தவிக்க விட்டா யே? என் கண்ணே! ஏ தெய்வமே. (அழ

சுதே - ஏன் அழுகிறாய்? உனக்கென்ன குறை? அரசனையடுத் தவர்க்கதிபாக்கியமானால் எடுத்தவர்க்கெவ்வளவு வேண்டாம். அரசனிருக்கையிலுனக்கு விசாரமேன்?

விருதசாரணி - அம்மா அழவேண்டாம் நானிருக்கும்வரை உனது பெண்ணாகவே பாவித்துக்கொள்ளலாம். அரசனை யெடுத்த கைத்தாயெனச்சுதேக்ஷணையம்மனும் சொல்லவில்லை, போனது போகட்டும், அம்மா அழவேண்டாம். நானே புஷ்பமெடுத்து தினந்தோறுந்தருவேன். இருப்பிடமறியேன்.

கூனி - மகளே ஆயிரங்காலமிருக்கவேணும். நான் செவ்வையாக மாலை தொடுக்கிறேனென்று எல்லாரும் வந்து நச்சுகிறார்கள். இல்லையென்று சொல்ல மனம் வாரதில்லை. பூந்தோட்டத்திலிருந்து ஒரு நாழிகைக்கப்பாலொசந்த மாளிகை தோணுதே அங்கே வந்து விசாரிச்சாத்தெரியும்.

சுதே - (கூனி முகத்தைப் பார்க்க)

கூனி - அம்மா உனக்குத் தெரியாததா?

சுதே - தெரிந்ததுதான். விருதசாரணி வருவாள். நீயெல்லப் போகலாம்.

கூனி - மகளே நான் போய்வாரேன்.

விருதசாரணி - நல்லது அம்மா நாளை வருவேன்

(கூனி முதலனைவரும் ஏக.

# மூன்றாங்களம்.

## கீசகன் மனை.

(சந்திரோதயம்.)

[பூவைக்

கீச - ஆலகட லமர்ந்தோன் பாதம் பொறையுடன் புனைந்த
குமுத நல்வாய் மலர்த்திக் கோகிலந் துயிலக் கூவ
நிசிசரன் வெருவ வோட நேர்ந்தவ ரிதய மல்கக்
கிரணவெண் கொம்புக்கூடு முயல்வந்து முளைத்த தம்மா.

உபாலம்பனம்.

பிறந்ததோ பனிக்கடல் வளர்ந்ததோ வான்மனை
யிருப்பதோ வீசன் எழின்முடி யாயினும்
வெறுப்ப தென்னே வெண்கதிர் மணியே
கறைப்படு மியல்பலவே காண்
கறைப்பா டமுதமுங் கடுவா கையினே.

விரகநவிற்சி.

நொந்து மூசி நோற்று விம்மி
வெஃகி யார்ந்து வாய் மலர்த்தி
வாடி யுள்ளம் விண்டு வீழ
மதி யழிந்தென்? னொளி நிறைந்தென்?
என்படு துயர மெவரே யாவர்?
மானின மருளும் வானிடம் விரும்பும்
கண்ணமு திவணுறக் காணே னென்னே!
காணினு மின்புறக் கதுவ நோக்கக்
காணாக் கயக்கி மாணா மயக்கி
வீணா வென்னை விழைச்சிக் கொண்டு

போனுப் போலப் பொலியு மலியு
மனைய வாகு மகலு மாமவள்
செய்தி யென்னை சொல்ல வாமோ?
வெப்போ விடியு மெனக்கு மின்னே?

புலரி. சோலை.

விருத சாரணி.
பொன்னி லாது பொலிந்தது கவியே
யென்றாழ் வரவு கடுத்தது வெளியே
சென் றிரந்தது மந்தி யிண்டையே
அன்ன மல்க வரற்று காலையே.

காலை வணக்கம்.

சோதி வானவ சோக முனிந்தெனை
வாதி யாதருள் வாயைய வேறொரு
நீதி யாலுயர் நேச னெனக்கில்லை
யாதி நேசனீ யாகுவை யன்பினுல்.

உலக றிந்துமுன் னுருவறி யாவண
மிலக நின்ற வெழின்மணி யாதவ
கலக மேது மிலாதெனைக் காப்பதுன்
குலந லம்மெனக் கூறுவ னுதியே.

சொல்ல லாவுரை சொல்லவு மென்மனம்
சுட்ட முன்றிடுஞ் சோகமே யுற்றிடும்
வெல்ல லாமோ வினைப்பயன் வானவ
விட்ட தொட்ட வினைபொறுத் தாள்பவ.

முற்பகல் மொழிந்த மாற்ற முடிவுற வேண்டி னின்னே
கற்பகச் சோலை யெய்தி கடிமலர் கொய்து கூனி
யுற்பன மாளி கைக்க ணுபசர மீந்து போந்து
பிற்பகல் சுதேட்டி னைக்குப் பேணின செய்வல் யானே.

சோலைநிலை.

ஆயதனம் வேத கீத மாயுமவ் வலிய னில்லை
சேயசெம் போத்து மில்லை சிறுகுயிற் கிளியு மில்லை
நேயமாங் கள்ளருந்தி நெகிழ்த்திடு மளியு மில்லை
பாயிருட் பனிந னைந்த பன்மலர்ப் பொலிவுங் காணேன்.

மலர் கொய்யல்.

நாடினு நனைசிறிதா னல்லரசி நலத்தகையே
தேடினுந் தினைபெரிதா மேதனமை தடங்கண்ணி
வாடினும் வம்பணைய வாகுமோ வேய்த்தோட்கே
யாடினு மழகலவா லகிலமெலாந் தொழூந்தகைக்கே.

(மாலை தொடுத்தேக)

கூனி - அண்ணே சாரணி வாராள். சற்றரவம் போடாது குந்தி யிரும். நான் வெளியே போய்வாரேன்.

கீசகன் மனை.

கீசகன் பலகணி வழியாக — அம்ம வருமென் றுவி யிம்ம
செம்மை யான சித்திரப் பாவை
யென்னடி சேர முன்னடி நோக்கம்
இல்லை யாக மல்கின விடையே
சிரிக்க வமையு முல்லைய ரும்பர்
ஏமுறு நோக்கும் காமுறு மனமும்
என்னைக் கவர விருமாந் தேகொல்
அருளுடை யம்மை யிருளிடை மலரா
வரும்பின் வம்பு விரும்பித் தந்த
தவப்பய னின்னே யுவந்தன னேனன்.

மனைமுகத்து கூனி எதிர்கொள — அம்ம வா! கண்ணேவா! கண்மணியே வா! நீ வருவை என்று இப்போதான் வாசல் வந்தேன். நினைக்க நினைக்க நூறுயிசு. மாலையுந் தொடுத்தாச்சா? எங்கே பார்க்கலாம். (மாலைவாங்கிப்பார்க்க)

நன்றாயிருக்குது. நானும் நன்றாத்தொடுப்பேன். இப்போ வயசாச்சுது. தள்ளவில்லே. இனிமேலெனக்கென்ன வேணும்? நீ நன்றாயிருந்தாலதே போதும். அம்மா ஆயிரங்காலமிருக்க வேணும். நீ வருவையென்னு மூறுக்குப்போட்டுவச்சேன். இரு அம்மா. கொண்டுவாரேன் கண்ணே.

(மடைப்பள்ளிபோய் புழைக்கடை ஏக.)

கீசகன் எதிர் நின்று

கண்ணேயிவ ளின்னேவரக் களைந்தேனுறு துயரம்
எண்ணுதெலா மெண்ணிக்கடி தேகிற்றென துயிரே
நண்ணினினி யுன்னலது நண்ணிற்றெனி னிதமே
பண்ணிப்பணித் தருள்தந்தெனை யாள்வாய் பெருமானே.

விருத சாரணி மன்னனைநோக்கி ஓட

கருவாக் காய வுருகா வேற்றென
வடுத்த காட்டிக் கடுத்த பெய்வித்
தின்னு மென்னு மிகமூடம் போம்பப்
படுத்த பழமை யெடுத்த விளமை
தடுத்துத் துய்க்க விடுத்து மடுத்துக்
குடிகெடுத் தாளே கூனியு மென்னை,
வம்புந் தம்புந் தும்புந் தெம்பும்
பேசிப் பேசிப் பின்றொடர் நீசா
காலமுனக்கிஃ தாலுறு சோதி
சண்டாள னெனை யண்டா தகலக்
கணித்தருள் கீர்த்திக் கணித்தருள் மூர்த்தி!

கீசகன் தொடர

முட்ட முட்ட வெட்ட வெட்ட
வெட்டிய முட்டிவிட் டோட வுயிரே
வுண்டோ வில்லையோ வெய்துமோ வென்ன
வேங்கி யயிர வேகிக் கவற்றிச்
செம்மையு நிலையுஞ் சீர் தூக்காது
தன்னல மலிய வென்னல னலித்துத்
தருக்கிச் சிறுக்கித் தயங்குபு வென்ன

மன்னவை கோட முன்னினை யாக
வின்னவை சொன்னவை யென்னவை
யாகா;
வாயினு மாக! வென் ஞக்கினை யுண்டே
யெள்ளள வாயினுந் தள்ளள வறியேன்
பின்னுள தோன்றும் பேணுவ னல்லன்
ஆதவ மென்னை யலேப்ப தந்தோ!

(ஆதவத்தால் மூர்ச்சிக்க; பின்னர்,
தெளிந்து மையல்கொள, வேக)

பொன்போலு மேனி பதறிக் குலேகுலேய
வென்போலு மீளி யெதிர்த்த ததிசயமே
மின்போலு மோடி முடிபணிய வேலாதோ
வென்போலு நெஞ்சே யிரங்கு.

# நாலாங்களம்,

## இராஜசபை.

*விராடன், கங்கபட்டன், மந்திரி முதலினர் பிரவேசிக்க.*

விராடன்- போர்த்தொழி லியன்ற பொருட்செல வனைத்துங்
கார்த்தொழி லாய கருநிதி யெல்லாஞ்
சேர்த்தல கிட்ட செல்வக் கணக்கை
யவையோர் நாப்பண் நவையறக் கிளத்தி
யேலா துளவே னுலா விடமுங்
காலா ளனுப்பி னுலா மிறையு
மோவா தய்க்க மேவா விருக்கப்
பன்னு ளாயு மின்னுண் முடிபெனச்
சொன்னு லானுய்,

மந்திரி- சுகிர்த மகிப!
சின்னு ளாகச் செயல்வே றின்றி
யொப்பிய னேக்கித் தப்பிய னீக்காத்
தொகுத்துச் சுட்டி வகுத்துக் காட்டி
முடித்த முற்று நொடிப்ப வின்னே
கேசரி யோலை கிழித்த விலக்க
மேசரி யாகின் மாசற முடிமே
நின்றுள தறைவன், (அரவம்.

விராடன்- நிற்க, நிற்க!
நற்றவ மாது கொற்றவ வென்று
கூவிக் குலைந்து,

கங்கபட்டர்- கவிந்து விழுந்தாள்!
எத்தகை யானுந லத்தகை யாரொரு
பாவமு மறியா ராவது மடமும்

நாணு மச்சமும் பூணு மியல்பா
லிவ்வகை யெய்த வெவ்வகை யுணர்ந்த
மெய்தின ளாமோ ?

துவரைப் பண்டிதன். — அம்ம! அம்ம!

இன்னுயிர் வாடி ஏங்கினள் என்ன!
முன்னிவள் வாட்ட முடித்துள னவையில்;
இஃதிவ ளுற்ற வேதனை யறியேன்
கேளா மென்னின் வாளா வாமே
யுணர்ந்தில ளாகி லென்செய் கோயான்?
விமல வாரிய! வாரி யெடுத்து
வாரி கொடுக்க.

கங்கபட்டர் எடுத்து நீர் கொடுக்க — கொடுத்தல் விகிதம்,

துறவி யாகலிற் குறைவொன் றில்லை
பருகிப் பிழைத்தென் பிழைபொறு மம்ம.

(சாரணி தேர்ந்து எழ.

துவரைப்பண்டிதன் — என்னை யறிவை யாகவி னிகழா
வனைத்தும் வேந்துணர் வாணினி மொழிமே
யெட்டுணை யேத மெவர்மாட் டேனு
மொழியா மொழிதனை மொழிவது சதமே.

(விருதசாரணி யறைவது)

விருதசாரணி - யதுகுல காம்போதி.

மழைமலிய வழகொழுகுந் திருவிளைய விழைவாகித்
தழைகுடிக ளினிதோங்கிப் பிழைகளையப் பெட்புறூஉம்
பழைமுறையி னளித்தழிக்குந் தழைமுக நிதிக்கிழவ!
உவப்புறூஉம் வினைநசைஇத் தவப்பயனுந் தானழீஇ

யவத்தமாம் வசைவாகை சுமப்பதூஉ மழகாமோ?
துவக்குறூஉம் வினைவசத்தா லவம்பிறவாக் கிடப்பேனை
நவக்கொடுமை நீர்பெருக நினைப்பதூஉ நலனாமோ?
மறப்பறூஉ மனங்கலங்க நிலைகலங்கி விழுவென்னை
யிறப்பறூஉ மெழிலழிய வடர்ப்பதூஉ மருளாமோ?
—அதனால்

பகைப்பெருமை யறுமகிமை மிகச்சிறுமை பெறுமுரிமை
யிவைமுறைமை யவைபொறுமை யன்மைகாண்!
பெண்ணிழிமை பேய்கலுழ்மை யெனும்பழைமைக் கிழ
[மைத்தே.

விராடன்: வராளா வோடி விரும்பின வாடி
யையந் திரிய வறையா திறகப்
பல்லோ ரிரங்கப் படுத்த தெவனோ?
சொற்சோர் வழியச் சொல்லிக் கொளுத்தி
யவையோர் முறைமே நவையறக் கோடி.

விருதசாரணி: (தலைகுனிந்து நிற்க)

துவரைப் பண்டிதன்:- பெண்ணாப் பிறந்தவளிப் பெரிய சபைவர
வொண்ணா ததற்கோ ருற்ற பெருந்துய
ரிருக்க வேணு மென்சிறு புந்தியிற்
றோர்ந்தது மொழிவன் றிருவுள மருள்க;
ஏதிலர் பெருக்க விறுத்த மகிமையன்
கேசரி யலாது கிளத்தப் பொறுமோ?
சிறுமை யுரிமை செய்ய முறைமை
யன்றெனா மொழிய வகன்றுள தையம்.

விராடன் - சிறுமை கண்டிலன்!

து-பண் - சிறுமை கண்டிலன்,
சிறுமை யுரிமை செய்யு முறைமை
யன்றென வறிக்கை-

விரா - ஆயினு மென்ன
குற்ற முளது ?

து-பண் - குற்ற முளது
கொடுமன வேட்கை.

விரா - கோடல் வேட்கை
காளைய ரியற்கை.

து-பண் - இயற்கை யியல்பே
வியலு முயற்சியோ ?

விரா - இயற்றின தொன்று
மியம்ப வில்லை.

து-பண் - இயம்பா மரபு
மெழிலுடையார் நிலை.

மந்திரி - நிலையை யலைத்தது
கேசரி போலும் ?

து-பண் - போன்மை யன்றென
பாவமே புகலும்.

மந்திரி - பாவம் புகலப்
பொருத்த முளதோ ?

து-பண் - பொருத்த மிலதேற்
புகன்றன ளாவள்.

விராடன்- அவையோ ரேநீ ரவைமுன் னவையு
மறைந்த தறிவீ ராகவி னிதினும்
விளங்க வேண்டின வேண்டிய வினவி,
யினைந்தன வேற்று, நயந்தன மொழிமி
ளுெல்லையி னேகி யோதன மற்ப
மயின்று வருதும்; (விராடன் கங்கபட்டர் ஏக)

மந்திரி - இயைந்த திருவுளம்.
இறையவ னவையி லெய்து முன்ன
ரினிதுறு வழக்கை நனியுற வாடிச்

சாக்கி கோடிச் சமர்த்துடன் முடிப்பம்.

(விசாரணை செய்ய

ஊன்.

நடி: வாழையும் விழையும் வெள்ளியி னிலையிற்
றாழையு மிழையுவ லோச்சை யளித்து
மாழையி ழைப்பினி லினிதே யென்ன
வேழையும் விழையு மோழைச் சுவையு
மூழையுங் கலமு முகக்க வுவப்பவே.

கங்கபட்டர்:- பலாயன வென்று மவசரப் பட்டுக்
கலாச மாகக் காரியம் பண்ண
லாகா தென்ன வாகா யுரைத்துளன்.

பலாயனன் :- என்ன விலையோ வெப்படி யாச்சோ
வேதா னுலு மிதமாக் கொளுமே. (ஏக)

(விராடன், கங்கபட்டர் சபைவர.)

மந்திரி - அரசே யவைக்க ணுய தறைவன்
பத்தினி யாரைப் பங்கப் படுத்த
நினைத்த விடத்து நேரலா னுகப்
பதித னுக்கிப் பிறவழி போக
விடுக்க விதிக்கும் விராட விதியே-
யவ்விதி வரைந்துளா ரவையோ ரரசே.

(விதியிய.)

விராடன்:-
விதியை நோக்கிற் கதிவே றில்லை
பதியை யளித்த பசுபதி யாகவி
னைமதாக் கினையா னிம்முறை பொறுத்து
விதி விலக் காக மதித்து
மன்னித் துளனுல் மாணவை யறிக.

(எல்லோரும் ஏக)

# 4-வது. நாலாமங்கம்

—— :※: ——

## முதற்களம்.

### நாடகசாலை.

சூரியாஸ்தமனம் - இரவு.

நடி :- கண்மணி யுற்ற கிலேசங் காணுதல் கொடிதென் றெண்ணி
விண்மணி விசயம் செய்து வேலைவாய் வீழ்ந்த வெல்லைப்
புன்மணி புனைந்த போர்வை போர்த்த புன் மாலைப் போது
முன்மணி முகத்துச் செம்மை யில்லெனு முகங்க டுத்தே.

ஷீ-சாரணி
நொங்கு ஏக.

தன்வினை தன்னைக் கொல்லப் பிறர்வினை பிதற்றி யென்ன
வென்னினு மிறையே யெய்த்த விளக்கா முன்ன முன்ன
வென்மனந் துடிதுடிக்க விணிக்கதி வேறே தென்ன
வொன்றுமே யுணரேனாகி யுயர்ந்தன மரம் போன்றேனே

2, கொடுமையைச் சொல்ல நாவுங் கூசுமே குலைதுலைந்து
விடுக்கவு மனமே வாரா திடுக்கணும் வருமா லின்னு
முடுக்குட னிதற்கு பாய முடிப்பது நவையே யாகா
தடுத்தவ ளாய வென்னை யாதரிக் காத தாலே.

3. என்னவா லிருந்தா லும்மே யேதினி விளைத் தாலும்மே
தன்னவன் வேறே யாகான் றன்னலான் வேறெ தானே
யென்னது நென்னெற் கண்டே னென்னுமே யகில மல்
[லால்
வன்மன மானதல்ல வாய்மைதா னென்னுங் கொலமேலா.

4. மெல்லியர் நல்லா ரென்று மெத்தவுங் கருதா ராகி
யெல்லியல் குவலை யத்துப் புல்லியல் காணப் போமோ
வல்லியல் கருதி யென்ன நல்லியற் கழிவு முண்டோ
கல்லியல் காலத் தும்மே கைக்குமெய்ப் பலமே காணும்.

5. முன்வினை பின்ன லேக்க மேனடப் பதுகீ மெழன்னே
யுன்னுதக் குணர்வி லாத வாசிமே லாசை யாகி
லென்குணக் குரிமை யாமேக் கறியிலா வுவரே போலச்
சின்னருஞ் சீச்சீ யென்ன வுன்செய ரொழியா தாமோ!

பிரகந்நளை- பெருமை வழக்கம் பிறழ லாமோ
காண- இரவி லொருத்தி யேகலு நேத்தி!
யென்சொலு முலகம்! புன்சொலிற் பிழையா.
வரங்க மாயினு மிரங்க வருமோ?
பேதை யென்பதும் பொய்போ குமோ?

விரு. சாரணி- அரங்க மாகவி னிரங்க லானேன்
பேதை யாகப் போந்தது பொய்யோ?
புன்சொ லுலகம் பிழையச் சொலுமோ?
பெருமை பிறழ வழக்க மாமோ?
நேத்தி யேக விரவா லெனுமோ?

பிரகந்நளை- இரங்க வரவது மரங்க மல்ல.
பொய்யே யென்னப் பேதை யேகுமோ?
புன்சொ லெனுமோ வுலகம் பிழையப்
பிறழ வழக்கம் பெருமை யாமோ?
என்ன நேத்தி யிரவி லேகவே?

விரு. சா- பெருமை யாகு வழக்கம் பிறழப்
பிழையா துலகம் புன்சொற் சொல்லப்
பொய்யே யென்னப் பேதை போமோ?
இரவி லேக னேத்தி யென்ன
விரங்க வாயினு மரங்கம் வருமே.

பிரக- பேதை யாகலிற் பின்முன் பாரா
தாற்ற லாறு மறியா வழக்கும்
சரியெனு மோவுன் னிரதஞ் சாயா
முன்னி ருக்க மேவுமோ வுனக்கு
முறையு ளாகா வுறுதி யிதுவே.

வி. சா- பேதை யென்னின் பின்முன் பாரா
தாற்று வழக்கு மறிய லாயிற்
சரியெனு மேயென் னிரதமுஞ் சாயும்.
இதுவே யாகு முறையுள் ளூறுதி
முன்னி ருக்கப் பின்மே வாதோ?

பிரக- சாகச மென்பது மாதர் மகிமை
சகச மாகக் கோடி யென்மொழி.
யவ்வழி யேக லகித மாகா
பின்னர் வருவது புன்மொழி கண்டாய்
வைத லுனக்கு வாய்மை யாமோ ?

வி. சா- மகிமை யுறுவது மாதர் சாகசங்
கொடிய மொழியும் சகச மாமோ
லகித மேவ லவ்வழி யாமே
புன்மொழி வருவது பின்னர்க் காண்டி
வாய்மையின் வைத லெனக்கா வாமோ ?

பிர: நமது வழக்கு நால்வ ரறிவது
உசித மன்று லுரைக்க லானேன்
மடமை யாகி லறிய வருமோ
காலமு மிடமுங் காண வேணு
மாகலி னிவனுனக் கவசர மின்றே.

வி. சா- நால்வ ரறிவது நலமா கும்மே?
மடமை யுடமை மாற்றி யாமோ?
காலமு மிடமுங் காணலு நலமே.
யாகலி னிவணின் றேகலு மழகே.

(ஏக)

# 2-வது. இரண்டாங்களம்.

## மடைப்பள்ளி.

பலாயன்- சாரணி யின்னும் வரவே காணேன்
வர. எவணோ கினளோ வென்றே வறியேன்,
தினமுன் வந்து திரியா கிற்பள்;
உணவு முலர்ந்து போகிற தென்னே
செய்வ தறியேன். சீறிச் சென்று
மன்னவன் றேவிக் கென்ன மொழிமோ?
ஏவின செய்வோர்க் கிதுவே வழக்கம்.
அவ்வழக் கின்படி யனைவரு மாவர்.
ஆகவி னம்மை யலேப்ப தாமே.

விரத சாரணி வரபலாயனன். விரத, சாரணி! உன், விரதஞ் சரிதம்!
சொல்லி என்ன? சூட்ச மறியாய்.
மாவு முறங்க மனித ரொழிவதோ?
காலா காலங் கருதினே யல்லே,
ஓரஞ் சொல்வை.

வி. சாரணி யுசித முமக்கே
எல்லரு மென்னை யிளக்கரங் கண்டார்.
உமது சித்தமு மவ்வழி யானல்
எனது கதிதா னெப்படி யாமோ?
எவரறி வாரென் றலையி லெழுத்தே?
இன்னு மெப்படி யலேக்குமோ வறியேன்.

பலா,- சோக முனக்குச் சொல்லித் தொலையா
தாக வென்னிட மறைத லகிதமோ?
இளக்கர மெவரே காணுவ ருன்னே,
யெழினல மெல்லா மிலகுமு னுளமே.
யாகவி னேவன்?

வி. சா,- அழிஞ்சு போனவன்,
அரச னுக்கு மைத்துன னுவனும்.
ஒருநா ளென்னை வருவழி காண
வொவ்வொரு விதமா வொப்பாரி சொன்னான் !
அத்தனையுமென் னவயக் கேட்டெனச்
சும்மா விருக்கச் சுதேட்டினை யம்மன்
கூனிப் பார்ததி கூறிய கேட்டுக்
கொண்டு மாலை கொடுப்பா யவள்கை
யென்று சொன்னா ளேதுவு மறியேன்.
சொன்ன சொல்லைச் சோற்றுக் கடனாத்
தொலைக்கத் தொலைந்தேன்.

பலா,- தொலைந்த தெவிடம் ?
வந்த தென்ன ?

வி. சா,- வழங்கக் கேண்மோ-
கூனியு மென்னைக் குளிரக் கூறிக்
கபடமில் மனத்தைக் கவர்ந்தன ளாகிக்
கூற்றுவ னாகிய கேசரி கையில்
ஒப்பித் தென்னைத் தப்பித் தாளே !

பலா,- ஒப்பித் ததுவுந் தப்பின விதமும்
எப்படி என்ன ?

வி. சா,- செப்படி போல
வப்படி யெதிர்கின் றெப்படி யிப்போ
தப்புவை யென்னத் தமோ றினளா
வோடின னோடியென் னதிஷ்ட வசத்தாற்
கிழக்கே தோன்றி மேற்கே மறையுஞ்
சோதி யறியச் சொக்கினன் வீழப்
பிழைத்துப் போந்தேன், பேரவை யானேன்.

பலா,- அவையிட மாக,-

வி, சா- நவையிட மாச்சு.
கூறுவ தென்னை ? குடிகே டன்னைப்

பிறியா முறையிற் போற்றிக் கோடி
யளித்தான் மன்னு மனைவரு மறிவர்.

பலா,- உசிதம், உசிதம். உலகு மிதுவோ ?
பெண்கொடி துயரம் பேணலு மிதுவோ ?
விண்குடி கொளாரோ ? வினையும் புனையுஞ்
செய்யப் போமோ ?.

வி. சா,- செய்த சிறுமையும்
பட்ட பழமையும் பேச முடிமோ ?
பட்டத் தரசும் பழிசெய் தானே ?
பாவி யானவன் படுத்தின வெல்லா
மாவி யானவ னுகவி னவனை
யாக்கினை செய்ய வடாதென் றுச்சே !

பலா,- மந்திரி யாகிலு மறுத்தா ரேசொல்,
நம்முடை முனியு நலஞ்சொல விலையோ ?

வி. சா,- முனிவ ரென்ன மொழிவ ரையோ !
மந்திரி யவையு மன்னனு மிருக்க !
எவர்தா னென்ன செய்வ ரவ்வுழி
வெம்பு மனத்தாற் றம்பித் தனரே.

பலா-, அன்று பிறந்தவு மானை யடிக்கு
மென்று மொழிவ தெறும்புவலிச் சிங்கம்.
அப்பெயர் தோன விப்பெரு மாட்டி
யலைப்ப தறிவோ வடலோ புகழோ ?
மலையிலக் காக மதிப்பினு மன்னன்
இலையிலக் காகிலு மியலா தொழிமோ ?
தர்ம மென்பது தமர்க்கே யானல்
ஏழை எளிமை யெப்படி யுய்யும் ?
கேளேன் கேளேன் கேசரிப் பெயரே!
பாரேன் பாரேன் பாரான் பவனே !
வாடி நொந்து வந்தனை யாக

வேதனை வேண்டாம் வருவது மில்லா.
ஓதன மற்பம்,

விர. சார- ஒன்றும் வேண்டாம்.
பேடி யிடத்திற் பேசப் போனேன்
பேடியு மென்னைப் பேசலு மொட்டாள்
மடைப்பளி யேக மாட்டுவை யென்றாள்.
பேடியு மென் துயர் நாடின ளல்லள்
ஆவியு மழியா தாக
ஓவிய மென்று துறைய லானேன்.

பலா-, பேடி யுடனே பாடிச் சொலினும்
நாடி யறிமோ நடிக்க லானே
வெம்பினை தொன்று வம்பிற் கூறினு
மறிய லாமோ வவத்த மானதால்
அத்தொடு கூறலி னெத்தொடு கூறினு
முத்த தாய்ந்து சத்தே யிரங்கும்
சுபாவ குணத்தி லபாவ மானதால்
என்னை யறியும்?

விர. சா-, அறியா தெனினு
மென்னுள மேவ வென் துயர் கூறி
யாறுவ மென்ன வணுகின வென்னை
நோவக் கருவி நோக்கிற் கருத்துப்
போகச் சொன்ன பெருமையி னிற்க
வேவப் பயிலு மெளிமைய ளென்னைப்
பாவந் தொலைக்கப் போந்தேன் பெரும.

பலா- அமுத மாக வடுதொழி லேனே
விகித மாக வேண்டி. யென்னை
நவின மாக நாடுவர் பலரும்
பெருமையு மில்லை பேணிக் கேண்மோ
சிறுமையு மாகுஞ் சிறப்பு மின்றே.

விரு. சா-, வாசவ மல்லன் நாசம தாக
வடர்த்த வன்பிற் கிடர்த்த விண்டேன்
ஆக வாக்கினை யளிப்பரு முளரோ ?
மாசின் மணியை யேசின ரில்லை
நீதியு நிசமு மோதிய தவமும்
பொய்க்குமோ காண் புனித மூர்த்தே ?

பலா-, எய்த்த காலையி லெல்லா நலமும்
பொய்க்கு மென்னப் புகல்வரு முளராற்
கண்ணே யலையப் பொன்னே பெருகின
கீர்த்தி முழங்குங் கீசக னிழைத்த
நேர்த்தி யாகா வென்பரு முளரோ ?
பெருமைக் கலவோ பிரபஞ்ச மாகும் ?
இல்லென் றனு முள்ளவன் வழியே
யிரங்கி மாழலு மிகசார்த் தகமே !
வல்லான் வகுத்த வாய்க்கா லலவோ
புல்லான் பொருத்தப் போமோ வம்ம !
என்செய் கோயான் ?

விர. சா-, என் தலை விதியே !
பிறந்த பெருமையும் வாழ்ந்த வருமையு
மிருந்த யிருப்பு மேங்கின நிலையும்
நினைக்க நினைக்க நெஞ்ச முடைந்து
கண்ணீர் வழியாக் கதறி யோட
வேனென் பாரு மிலயோ கொல்லாம் ?
வல்லோ ரென்ன வயங்கின வசுரர்
பல்லோ ரெல்லாம் படவிலை யோகாண் !
சூர னுமலவோ சுமக்க லானன்!
விநாச காலம் விபரீத புத்தி
யென்பது பொய்யோ வெனை யாண்டவனே ?

பலா-, விசித்ர மாக வேண்டுவ தென்னை?
பவித்ர மாகப் பல்லோ ரறிய

மிடற்றின் முடிந்தா ரசுரரு மேனை
வழியின் மாட்ட வழிந்தா ரில்லை
யவ்வழி கோடன் முறையோ வறைதி.

விர. சா-, வாலியு மன்று வம்பி னழித்தான்
பாலியு மென்னுப் போற்று பிரானே!
அறமோவது மறமோவது
விகழோவது புகழோ?
முறையும் மதின் மறையுஞ் சொல்லு
மிறையே யென்றன் துரையே!
பெண்ணின்வழி நண்ணிச்செலு
மெண்ணம்மிது வாமோ?
குணமோவொரு மணமோவது
நலமோ நல்ல மனமோ?
குற்றம் மது குற்றம் மினி
முற்றுங்குடி கெடுக்கும்
எந்தாய் மிக நொந்தா யென்று
நாடிக் கருவறுத்து
வாழாவெனை வாழும்படி யாளாய் பெருமானே.

பலா-, வாலியை வென்ற வாய்மை விசயப்
போலியை யிப்போ பொலிவுற வியற்றல்
நலமே யாக. நால்வ ரறியா
விதமே யாக வேணு மாலினிக்
காலமு மிடமுங் கருத லுடனே
வீர முபாயம் விதமு மாகிய
வனைத்து மறிந்து நினைத்து முடித்த
விதமே யாகி லேத மில்லை.
கேசரி யாகிலு மென்னே? கேவலம்
பெண்ணின் பாவங் கொள்ளப் போமோ?
இவனே யாரு மிகல் பெருமைக்கே?
மற்று ரிலரோ மல்லு விளைக்க

வாற்று வருமோ? வறிவே னவனை.
உணவு நல்க வுறுத்தெனை நோக்கி
யிவனோ வாசவ னுவி யழித்தான்
என்று வினவி யேளனஞ் செய்தான்.
அன்னே யவனை யலைக்க நினைந்தேன்
இன்னே யவ்வினை யெழினுற முடிய
வீசன் றிருவுள மென்னோ வறியேன்?

விர. சா. சபலம், சபலம். சார்வ பௌம!
சுபல மென்னே சொல்லற் பாலோ
இன்னே கேசரி மாள வியற்றும்
அன்னவ னடையு மவஸ்தையு நோக்கின்
றலையு மெடுப்புந் தெறித்துப் போமே.

பலா- கண்ணிய னோபுகழ் புண்ணிய னோவிறற்
றிண்ணிய னோமண மெண்ணுவனோ
எண்ணவோ வசையல்ல வோவினி
நண்ண வோபகை யுண்ணவோ
கூடு தே பழி
யாடு தே புகழ்
சேர வம்பெனைச் சிதைக்கவே
மீறு தே மண
மூறு தே புயங்
காலமு மேயனு கூலமு மாகவே,
கோலமு மாமிந்திர சாலமு மாமெனே.

விர. சா-, நலங்கொண்ட வஞ்ச நெடுமீளி நலிகின்ற வேளையி
னோல மிட்டுக்
கலங்கு மலவோ பெரிய கார்கொண்ட வளநாடு
மரசனு மாவரெல்லாம்
சினங்கொண்டு நம்மைச் சீரழிக் காவணம்
வனங்கொண்டு வெம்பகை வாடுமா றுகவோ
கனவிருட் பிழம்பிடைக் காணுமா றுகவோ

விநைவினேன் பிழைதப விளங்குமென் னீசனே
மனதினின் மகிழ்வெய் தியே.

பலா- மகிழ் தந்து தருக்கிப் பொலிகின்ற வன்னெஞ்சன்
மாளாப் பொதும்ப ரிடையே
கெழுநள் ளிரவினிற் பொன்னகர மகலவுன்
நீங்கலாக் கபட மனதை
நளினமுக மலர்கொண் டலர்த்தியே சாத்திநீ
யிளநகையு மழகனு மிலங்கவே காட்டிநீ
எமபாச மென்னவே வெழில்கொண் டிழுத்தவனே
இமவான்று ளங்குமொரு கதைகெண்டு வீசவே
எம்முன் விடுக்க வசமோ ?

விர. சா-, அம்மம்ம வென்னவிது முறைமையோ மாதர்க்கு
மழகாகு மச்ச மடமோ
விம்பரும் மும்பருஞ் சொல்லிச் சிரிக்காதோ
விகமொன்று நீதி யலவோ
பாவியேன் பட்டவினை போதாதோ வின்னமு
மாவியை யழிக்க வொணுமோ
வம்பென்ன தும்பென்ன வாய்ந்திடுங் கீசகன்
சும்மா விருப்பனோ சொலாய்.

பலா- தீயபுந்தி வஞ்சனுன்னை திறக்கழிவு தேரினனால்
நேயமென்ன மாயந்தன்னு னிகழ்ந்தழிக்க வாகாமோ?
காயமுள கற்பினுன்னைக் கலக்கழிக்கக் காணுவனால்
பாயமுள புறவந்தன்னிற் பறக்கழிக்க வாகாமோ ?
சீயமென வாக்ரமித்துச் சீரழிக்க வாகுவனல்
ஆயமொடு யாமந்தன்னி னலக்கழிக்க வாகாமோ ?

வி. சார. அன்பன் சொன்ன வமைதி கேட்டாற்
றுன்ப மில்லை தொழுதே குவனே-

(பலா-வி. சா-ஏக)

# மூன்றாங்களம்.

உத்தியானவனம்.

சூரியோதயம்.

நடி- கண்மணி விளங்கவரு விண்மணியு மாகியே
கடபடா திப்ர பஞ்சம்
உண்டுண் டுடுத்தி சுகமாக வாழவே
யுதயமா யகில மெல்லாம்
எண்ணுதற் கரிதாகி யெழில்கொண் டிலங்குமோர்
ஏகாந்த மூர்த்தி யாகி
பண்ணப் படாத வெகு பாப கோடிகளைப்
போக்கப் பிரகாச மானான்.

விருத்தம்- சார வர நிகழ்வு
சீத மலையக் கோதை திருந்திக்
குடிஞை வந்து குங்கும மணியக்
கலையு நெகிழ்ந்து தோகையு மாடச்
சுள்ளி முறிந்து காலிடை தாக்க
வம்பகங் கடுப்ப வம்புய நிலையா
கோக மலியா விடையே யில்லெனத்
தாது குலைந்த நிலையும் தெரிய
கேள்வி சாத்தி வள்ளை குலுங்க
மெட்டி மானச் சிச்சிலி யார்ப்ப
காலைப் போது கடுமையின் வரவே
யின்னல மெண்ணி யுயிர்ப்பத்
தொன்னல மாய்ந்து துவளும் போது
மதுப திக்கை யமளிகொள விடுக்க
விதுசமய மாகு மென்று
எடுத்துச் செம்மை படுத்தித் தொடுத்து
மடுத்த னீரென வடுத்த வேளையே.

ஓரிடங்கரந்து
(மாலை தொடுத்து நிற்க

கீசகன் வரங்கிழ்வு

சாமள மேனியுஞ் சாயா விழையும்
கமல முகமுங் கருவிளை விழியும்
வித்துரு விதழு முத்துறழ் நகையு
மிச்சை யகலமும் பிச்சை மருங்கும்
பச்சைத் தொடையு மச்சக் கணையு
முச்சிதப் பதமு மிச்சிறு வாமத்
தியங்கு மாயிற் குவிந்து கோட
நயந்து வரவே பயந்து போமோ?
இவ்வழி வழக்கு மெவ்வழி காணேன்.
இருந்த உளவை யெழுந்து சொன்மின்.
அளியீர் எல்லா மறிவீ ரலேயோ?
பிணிமுகஞ் சரண மணிமுகம் பாணி.
எங்கள் மரபின் ஒங்கன் முறையோ?
யானே யடிமை நீரே வுடையீர்
ஆக்கினு மழிப்பினு மகிதம் விகிதம்
அனைத்து முமது சித்தமே யாமே.

வி. சார- கேசரி யிவ்வழி இளத்தப் பொறுமோ?

கீச- அந்தோ! அந்தோ! அமுத மொழியே!

வி. சா- விதியு மினைத்தோ வீரமும் போச்சோ?
மதியு மினைத்தோ மானமும் போச்சோ?

கீச- வசையே மொழியினு நசையே யாமே.
இசையா தொழிமோ வெழிலுறை யிலேயே?
காணே னன்னே கவினுறு காட்சி
வீணேன் பிழையை விரும்பி யளித்தி.

வி. சா- பிறர்முத லுக்குப் பேயாப் பிறக்க
நாய்போ லலைத லலமா கும்மோ?

கீச- நாயா றுனும் பேயா றுனும்
நலமாக் கொள்வாய் நல்லாய் நவிலாய்?

வி. சா- மடமு மச்சமு மங்கையர்க் கிலேயோ?
அறிவுந் தேற்றமு மாடவர்க் கிலேயோ?

ஈச- பாக்கியம், பாக்கியம், பகரு மம்மா.
அறிவுந் தேற்றமு மமையு முமக்கே.

வி. சா- காந்தார முறையும் பஞ்சக நிலையும்
ஓதக் கேட்டி யுணரா தென்னை ?

ஈச- அறிவு கெட்டே யடன்மாண் டிருக்கக்
குறிப்புணர் வேனோ கோகில மொழியே !

வி. சா- நாண மகன்று நவில வொண்ணுமோ ?
உய்த்துணர் விலையே லுலக மாமோ ?

ஈச- சரதம், சரதம், மோட்டி யுன்
மொழியள விலலை மிருக மானேன்.
காந்தர முறையும் பஞ்சக நிலையும்
காந்தர வாம்சமு மைவர்க் குரிமையுங்
குறிப்ப தாமோ குன்றின னறிவே.

வி. சா- புகல்வது சற்றே பொருந்து மேனும்
வெளிப்படை யாக விளம்பக் கேண்மோ
காந்தார மென்ப தின்னகர்ப் புறவம்
பஞ்சக நிலையே பரிதியு மதியு
மீனு மங்கியும் விளக்கு மியங்கா
வமையம தாகு மிமை பிசகில்லை.
இக்குறிப் பினிது நாடிப் பிழைப்பை
யில்லெனி னெல்லா வண்டன் வளமும்
அறிய லாவேன் அவனுறி னெல்லியே.

ஈச- குறிப்புணர் விக்கக் குளிர்ந்தே னுயிரே
திருவடி காணத் தெரிசனந் தாரும்
பழவினை யகலப் பணிவே னம்ம.

வி. சா- குறிப்பிற் பிறழ வறியே மரபின்
நினைப்பி னியங்க வமைவது மாமாற்
பணியப் பங்கய மலர்வேண் டாவோ ?
விதுவே யாமுன் னெழிலு மன்பும் ?

விரத வேளை யின்னு மிலதா
லன்பன் வருவ னமைய மாச்சுது.
விரைமல ரேகி விரைவிற் கொணர்தி
யேகினு மெல்லை காண லாமே.
(கீச ஏக மலர்பறிக்க-

இருப்ப தினிமே லிளித்த வாய்த்தனம்
பொறுப்பக் கரந்து போவே னுகவே-
(வி-சா-கரந்து ஏக)

கீச- மலரேவிது மலரேவிது மலரேவிது மாதின்
நலமேவிய பதமேவுத லாமேமன மலராஞ்
சலமேவிய விதமேகினை யாதேவரு மழகா
தலமேவிய வளமோகமொ டாமேலது மணமே.

2. மணமேகொள வருவேனுன தெழிலேமிகு பாதம்
வனமேவவு முறுமோவென வாமேலது நாட
முனமேயொரு மொழிதாவென மணமாமலர் சாத்தக்
கனமேமிகு மனமேயுனைக் கரவாதொழி மானே.

3. மொழியாநல மளியாவித மகிழாவெழி லேக
வழியாமன மழியாமொழி தளராவிழி யாக
வழியாயினு மளியாவன மொழியாதினி நாடச்
செழியாவிரு ளிழியாநல மெழிலாமது காணே.

4. தவமாதினி விரவாவொரு பொருளாகினை யாளே
யவமாகிலு மருளாமொழி விலகாவரு காலே
யவமாயெனு மலையாகிலே யருளாவதை யாகச்
சுவமாமென வணியாதொரு நுவமாகிலு மாகா.

5. கமலாசன மணியாமென வணியாதுள மேக
விமலாகிரை யனையாயினி வசையாகிலு மேவ
வமலாமன மிளகானன முளதேலது நாடச்
செமலாமெனு மிசையாலது சீரேயென லாமே, (ஏக

# 5-வது. ஐந்தாமங்கம்.

## 1. முதற்களம்.

### நகர்ப்புறவம்.

*பலாயனனும் விருதசாரணியும் பிரவேசிக்க.*

இரவு.

ஊமனோலவு மூளனு முற்றுழி
யலரி யோடவு மல்க லலையவே
கமல மூடவி கங்கமொ ளிப்பது
சகச மன்றெனச் சொல்லலு மாவதோ.

பலா. அந்த கார மழகா யிருக்க
வெமது கருத்து மெழில்பெற முடியு
மாகிலு மிஃதொரு சின்னச் சோலை.
மருவா வரினு மறைவிட மேவு;
மிதற்கினி யேற்ற யுக்தி யொன்று
தேடிச் செய்வது திறமே யன்றோ ?
மண்டப மொன்று மருங்கி லிருக்கப்
போவோம் வாராய் பொன்னே யவிடம்.
சுற்று முற்றுஞ் சுந்தர வல்லி
சுமந்த செடிகள் சோபித மாகி
நிமிர்ந்து குனிந்து நெருங்கின நன்மை
யெமது மறைவை யெளித்து ணுணர்த்தா.
ஓர்பா லிவிட மொதுங்கின ளாவை ;
யானு மோர்பா லொதுங்கி யமர்ந்தவ
னெப்பொழு தெய்து மென்றி ருப்பனே.

விர. சார: அழகு சொட்டுது ! அர்த்த சாமம் !
தெரிவை யானுந் தமியை யாகேன்.

நெஞ்ச மெரிய நிற்கவு மாகேன்.
எரிஞ்சு போவா னென்ன செய்வனோ ?
பக்கமே யிருப்பாய் பலாயன முதல்வ.

பலா- இப்படிச் சொன்னா லெப்படி யாகும் ?
இடிகல் லெனயா னிங்கே யிருக்க
என்ன நேரும் ?

விர. சார- ஒன்று மில்லை.
ஆகிலு மெனக்கோ ரைய முளது.
வம்பி லென்னை வலியப் பற்ற
நீவிரும் வந்து நெருங்கிப் புடைத்தா
லடியே யுக்கே னபாய மில்லை ?

பலா- உன்னை யடிப்பனோ வொண்ணுதல் மணியே?

விர-சார-எப்படிச் சொல்வது தப்படி யானால்
விதிமோ சத்தால் விளிதலு மியல்பே,
சதிமோ சத்தால் சாதலு மாகும்.
இருட்டடி யென்றாற் குருட்டடி யதுதான்,
எப்படி யாயினுந் தப்புத லரிதே.

பலா- சுபுத்தி கெட்டுச் சபுத்தி கேட்க
நன்று நன்று நோவ தென்னை ?
ஒருவர் நிற்புளி யிருவ ரிருக்க
வையுற் றிவ்வழி யருகே வாரா.
வரினுஞ் செயலற வருமே னமது
விருப்பு முளைய வெறுப்பு விளையுமே.

விர-சார- அருகு முளைக்க வேனம் விளையுமோ ?
வைர மிலையோ வலியே போமோ ?
பின்னும் முன்னும் போவதும் வருவதும்
பார்க்க வாமோ பரிபவ மலைக்க ?
வந்த விதியும் வழித்தங் கும்மோ ?
ஏங்கி நின்று லேமாந்து போவோம்.

துணிந்து நின்றாற் றுக்க மில்லை;
என்ன வாயினு மெதிர்ப்பது நலமே.

பலா- பல்லி சொல்லிப் பாழையில் விழுவது
வழக்க மாகு மிழுக்கே யில்லை.
சொற்படி செய்வது சிலாக்கிய மன்றோ ?

வி-சா- உம்மைப் பற்றி யுய்ய வரவே
ஊரா ரென்னை யுடற்றப் பொறுமோ ?
துக்கமு மிடியுந் தொடக்கத் தெரியும்.
வலியா ரென்றால் வலியக் கொள்வர்.
எளியா ரென்றால் இகழ வாவர்.
சிறுமையி னலையச் செல்வது பெருமையா
லென்னல மெண்ணிய யானே
முத்தித் தும்பை மிலைந்து போவனே.

பலா- விரதம் விகிதம், விநோத விசயம் !
நயந்து கேண்மோ நன்மை யாமே.
எனைக்கு முனைக்கு மிதய மொன்றா
லபேத பாவ மாகு மதற்கோ
ருபாய முண்டு ;

வி-சா- உதவ லாமே.
கருத்தின் வண்ணங் கனைகழ லணிவேன்
மெட்டி யணிந்து சுட்டிக் கொளுமே.

(இருவரும் மாறு தரிக்

பலா- புறம்ப ழிக்கப் போவது பிசகோ
வதுவும் பொய்யே யாமோ வறியேன்.
பெரியோர் பழிக்கச் சிறியோர் சிரிக்க
வுய்வது நலமோ வுத்தம சகியே ?
இதற்கென் செய்வே னெளிமை யிலையே ?

யெவ்வழி யாயினு மேதப் பாக்கே !
கல்லு மனமுங் கருப்பூ ரம்மே !

வி-சா- அளிம்பு செய்தாற் கரன்றுணை யாமோ ?
பரிபவம் வேண்டாம் பழியே யாகா ;
வாயினு மதற்கோ ரனுபவ முண்டாம்.
சுதேட்டிணை யம்மனுஞ் சுற்றத் தாரு
மறிவ ரென்னை யானு மவர்க்கு
விஞ்சய ரென்னை வேட்டா ரைவரென்
றறிய வன்னே யறைந்துள னதனு
லற்புத மென்று மடைய லாகார்.
விஞ்சயர் வெகுளி வென்றன ரென்னப்
பிரசித்த மாகும் பிசகே யில்லை.
உருவெளித் தோற்றங் கருவிழி யலைக்க
வுமது மரபினை யொன்று முணரான்
தன்னல மெண்ணித் தயங்கி யாவனே.

பலா- கிட்டிய வுடனே கெட்டி யாகக்
கட்டி யவனைக் கீழே தள்ளி
முட்டிகள் மோத முடக்கிக் கொள்வன்.
எட்டி யிருக்க, வெதிர்கில் லாது
குட்டிக் குலையக் குளிர லாமே.

விர-சா- அமைய மாதலிற் சமைந்து வதிவம்
வாய்மை வண்ணம் வருவது மில்லா
வுழல வுழற்றி யொதுங்க லமே.

(இருவரும் காத்திருக்க)

# ௨-வது களம்.

:o:

## நகர்ப்புறவனம்.

ஜீசகன் பிரவேசிக்க.

ஜீச: மானே மயங்கு மாலைப் போது
தமியை யாகித் தயங்கு தண்டலை
வெஃகி யலையா வருமோ ?
வந்தும் விநோத விஞ்சையின் வதியா
வென்னல மெண்ணிக்
கருத்த கானிற் கானலு மாமோ ?
இன்னல மெண்ணி யுயிர்ப்பத்
தன்னல மெண்ணித் தருக்கிய வாமோ ?
குவிந்து கோடக் கொலைவா ளனையக்
குழையுறு நோக்கங் குவியக் கூரிய
வன்பி லிருக்க வயங்கி யாமோ ?
ஒருமுறை யிருமுறை மும்முறை
எம்முறை முனிந்தன ளேகச்
செயலு மழியச் சீர்கெட் டேனே!
என்னல மெண்ணித் தொன்னலந் தொலையா
வருமோ வீணு வனப்பும் போமோ
இம்முறை யிறந்த மும்முறை போலா
தெங்குறை தீர்ப்ப னெதிர்ந்த காலையே.

(வனத்திற்றேட,)

பலாயனன் மனதில்: கானன மாயக் கெடுமே யாமே!
யிகலு மொய்ம்பு மென்ன வாமோ ?
விகலு மாயினு
மகல வாமே யமைந்த வனப்பே.

சீசகன்- அடவியு மிருளும் புடவை புனைந்து
வள்ளிக் கதுப்பின் வதிய மூடிய
வெழினலங் காண வெய்திய யானே
கண்ணே யலைய மணியே மயங்கி
யெழிலுறு நலமு மியங்கா வெய்துற
வாய்ந்த மட்டு மறிவே யொல்குபு
வெஃகிய வெளியே
வெளியே வெஃகிய
வாய பொலிவே மாய மன்றோ ?

விசார } காணி லெம்மை காணு வழியே
மனதில் } மண்டப மருங்கின் மேவி யக்கா
லெம்மைக் காணி னென்னல மென்னும்?
பலாயனப் பாவை யெதிரே யிலங்குபு
கல்லொன் றெறியக் கனிந்து காணுமே.

(கல்லெறிய)

பலா } கல்லொன் றெறியக் கலக்கிய தென்னே
மனதில் } சீசக னோமோ காணு தொல்லை.

(கான்வழி நோக்க)

சீச: காலு மியங்காக் கருமை மயங்கிய
கங்குலி னிடையே கல்லிட் டார்த்தென
வோதை யெழுந்தது கோதை செயலோ
மண்டப மொல்லை மேவுதும். (நோக்க)
உருவமோ வரிவையோ வொன்று முணரேன்
உருவெளி யாமெனி னோசையு முண்டோ
கண்ணே யலையக் கேள்வியு மிலையோ
வறிவே யாமே பரிவி னியற்றிய
கேண்மை யென்னைக் கிளத்தப்
போமே மருங்கின் மண்டபம் பொலியவே.

(கிட்ட)

கண்ணேயிது கண்ணேயிது கண்ணேயிது காணப்
பெண்ணேபெறு மெண்ணம்மெனப் பின்னேவெளி யாமே
வண்ணம்பெற விண்ணேவிய வஞ்சம்மென வாமோ
நண்ணேமன மெண்ணுநல மின்னேயென லாமே.

பலா-மனதியல் } முன்வினை யலைத்த முடிவே காண
வென்னல மெண்ணி விளங்கா விருளிடை
யுன்னி விம்மி யுயர வந்ததே !
நன்னவன் வாய்மை நவிலவு மாமோ ?
சின்னவன் கிளவி சீர்த்தியே யன்றோ ?
வன்னமு மருளும் விநோத மின்னே !
சின்னப் பட்டுச் சீரே யழிய
வென்ன முறுவிலித் திலகா
வுன்னதத் தூண்வழி யொருபுடை யணைதுமே.

(தூண்வழியணை

கீச- பொன்னேயுன தன்பேயது பொலமேபெற வாமே
வின்னேயது கன்னேமன மன்னேயென லாமே
யன்னேயினி யென்னேயிக லாமேயெழி லாக
மன்னேயென லாமேயென மாழாதுய லாமோ ?

(கைகொடணைய மே

பலா மனதில் } கற்றானென வெண்ணுதொரு கங்குற்சிறு மைக்கே
வெற்றானென வேண்டாதறு வித்தாரக னெத்தா
சற்றானுமே யற்றேறுமெனச் சடிலம்பரி வெய்தப்
பற்றுதினி விட்டாலெனை நட்டாரினி யொட்டார்.

(பலா-கைகொடுக்க கீசகன் பற்

கீச-கைப்பற்றியுடன் } மலரேநிக ராமென்பது மெதுவாகிய கரமே
மரமேநிக ராமோவது மிதமாகிய மரபே
நலமேவினை யாமேயது நலியாவரு மையோ
கரவேயிது கரவேயிது கடினம்மிகுக் கடினம்.

(பலா-விடாது பற்

பலா-தூரே ஒருகடையு மேனைம்
கடின மனத்தாற் கன்மிட மேவவே
குடில மனத்தாற் குன்றின னுகவே
தடியு மனத்தாற் றறியொடு தேயவே
சடில மனத்தாற் சாவழி யாகவே.
(தறியொடு கடைய)

ஸ்ரீசகன்- வஞ்சனை யாலெனை வாட்டநி னைந்தது
கொஞ்சமே யாகிலுங் கூடுமு றைமையோ?
விஞ்சினு மெஞ்சினு வீறழி வாமதுன்
நெஞ்சமும் புண்பட நேரப வாதமே!

பலா:- வாடினன் வாடினன் வம்பெலா மேகவே
மனதில்- யாடின னுடவு மம்பர மாமென
நாடின னீதியு நன்றலா வேலையே
தேடின பூசலுந் தந்திர மோவதே?

ஏதினி யாகிலு மேதிலன் கைவிடல்
நீதியி தாமெனு நேயமு மேவிடும்
மேதினி மெச்சவு மேவிடு மானதா
லோதிய நீதியி னூக்க மறிவமே. (கைவிட)

பலா :- யுத்தம்.

எட்டித்தொடை தட்டிப்பிற கொட்டிக்கர முட்டித்திற
முட்டிப்பொரு தட்டித்தலை குட்டிப்பல சுட்டிப்படக்
கட்டிப்புதை மெட்டிச்சொரி சொட்டித்தடி கொட்டிக்கொள
மட்டிப்பகை திட்டிச்செல வெட்டிக்கொலை கிட்டிப்பதே.

ஸ்ரீச-யுத்தமும் முடிவும் :-

வந்துகந்து நின்றநேயம் வன்மையாம் விதங்கொலோ
கந்துகந்து கன்றலான கன்மமென்ன கன்மமோ
வெந்துகந்த வம்புமென்ன விம்மலான வன்மமோ
நொந்துகந்து மந்தமின்றி நோவனைந் தொழிந்தனே
(முடிய)

# 3-வது களம்.

## உபகீசகர்வதம்.

நகர்ப்புற வனம்.

பலா- புன்மையர் புகழப் பிரதாபம் பெருத்துச்
செம்மைய ரிகழச் சிறுமை சிரிக்கு
மொய்ம்புடைக் கேசரி முந்துபு போரின்
முடிந்தன னுக மதுர மொழியே
விடிந்த நம்வினை விகித மாகவே.
காலையி னுடலங் காண்பா ராகி
லேதினி யாமோ வென்றே வறியேன்
இதற்கென் செய்வோ மெழில்பெறு மானே?

வி-சா- இறைவ! யானென் றியம்பக் கேட்டி,
நெப்புண் டானுற் றுப்புண் டாகும்
ஒப்பில தானுற் றப்பில தாகுந்
தமரே யெனினுந் தயங்க வாவர்
மதிபோ வுழியா காயம் போவது
காண லாமே கணிக்கு மெல்லையே.

பலா- மறைப்ப முறித்து மாணுரு வழியக்
குறையக் குழைத்துக் கொம்மை கோட்டி
மடுப்ப முடிமே மருமமு மெண்ணு
விடுப்ப வாமே வேற்றுமை யென்னே.

(கீ-உடற்பிண்ட மாக்க)

வி-சா- வடுப்பட்ட வான்பிறை யஞ்சா வுடுக்கணஞ்
சுடர்ப்பட்டுப் போமாறு சேர்ந்தா னென்னிடரும்
இருள்வலிக் கெய்த்த வெழினலங் காட்ட
வருள் சுரந் தொழுகு மரனே
காடு விட்டு நாடு செல்வமே.

பலா- இருளிடை யொருவ னரும்பெறல் வேண்டி
வரினும் வஞ்சம் வஞ்சமே வெஃகு
மையுறு மாகவிற் கையுற வுண்டாம்
படரப் படுமோ பட்டெனு வுடனே
பொறுத்துப் போவோம் பொன்னே யிப்போ.

வி-சா- இருளிடை யொருவ னெம்முடை வழக்கும்
வெருவுடை நவினமும் விழியினை யலைக்கப்
பார்த்தை யுற்றுப் பரிபவப் பட்டுப்
புரமே யோடிப் பிதற்றித்
தப்பு சுமந்து தாழ வாவமோ ?

பலா- பிறர்மனை வெஃகிய பேதை பட்டாற்
றப்பு மென்னே ? தாழ வருமோ ?
பெரியோ னென்ன பிழைசெய லாமோ ?
வரசு மதற்குப் பரிசோ கொடுப்பது ?
வருவது மில்லா வெருவர லாகா
விருத மாடி வருவ னியாவனும்
பரிபவம் வேண்டாம் பாதக மென்னே.

(நீராடவேக)

(ஒரு தீச்சுடர் விளக்கம் வர)

பலா- கண்டு மனதில் } பந்தங் கொண்டு முந்த வோடி
வருவ ரெவரோ பின்னர்க் காண்டுந்
திருட னுக்குத் தீபம் பிடிப்பார்
துணைவ ரல்லெனத் தோன்று மோகாண் ?
ஒல்லை யேகி யுற்ற துணைக்கு
முன்ன முணர்த்தி மோச முறுவழி
கரப்ப யாமுங் கரந்து நிற்பமே.

(கரந்து நிற்க)

(உபகீசகர் பிரவேசிக்க)

உப-கீச:-கங்குல் யாமக் கானக மொலிப்பக்
கேட்டே மண்ணல் கிளர்மனை யேகி
யேதிலர் வரவோ வென்ன புதுமையோ ?
வென்னக் கேட்டுப் போதர நோக்க
வண்ணலு மில்லா தழிந்த துளமே.
மோசத் துய்த்து முறுக்கின ரோகாண் !
நாச காலமோ நம்மை வெறுத்ததோ ?
தன்னய மெண்ணித் தருக்கிச் சேர்ந்ததோ ?
எம்மோ டேது மியம்பலா காவோ ?
சொல்லி யென்ன ! வென்னு மின்ன
செய்ய லாவன், சிறப்பு மோரான் ;
முன்வினை நலத்தான் முன்னின முடியினு
மின்ன வினைமுக்க வினிதென வெண்ணான் !
என்ன வெண்ணின னன்ன துணிவன் ;
களங்க மில்லான் ; றுளங்க லாகான்.
பெண்வழி யொருநாட் பேணிச் சென்று
பேரவை யிகழப் பெற்று னந்தோ !
வல்வினை தொடா விவ்வினை யாச்சோ ?
கானக மெல்லாங் கடிதி னுய்வமே. (தேட

பலா- தேடித் தேடித் திருவே காணின்,
ஒருசார் மர்க்கடங் கொண்ட மாலை போன்மே ;
யாடவர் நிலையு மடர்த்த வன்பு
மிசைய வாமே விலம்பக முடிபென
விளங்கத் தோன்றிற் களங்க மெண்ணார் ;
எண்ணின் மோகன மெச்ச மாட்டி
முடிப்ப முடிமே
முடியு மென்னின் மோச மிலையே.

(எதிர் சிறிதியங்க

உப-கீச- அண்ணே காணு! மண்ணே காணுஞ்!

ஒருசார். சின்னப் பட்டுச் சீரே யழிந்த
வலங்கோ லம்மே! யழுகப் போமோ?
பங்கப் படுத்தியோ பழியே மீட்பது?
மண்டப நாப்பண் மாய மென்னப்
பிண்ட மாகப் பிடித்து முக்கின
பழியை முற்றப் பார்க்கப் படுமோ?
பாங்கர் முற்றும் பரிந்து பாரீர்!
தம்பி நீபார், தமைய நீபார்!
காணக் கிடைப்ப தெவரே யாயினும்
பின்முன் பாராது பிடரி பிடித்து
நெட்டிய நெட்டின் நெடுக வித்தலங்
குத்தக் கொண்டு குலைப வாரும். (சிலரேக)
மோசக் கருத்திது! மொழிய வேணுமா?
பண்ணு ளாகப் பரிந்து செய்த
படுகொலை யையோ!

உப கீச, ஒருசார்- பாரும்! பாரும்!
வாரும், வாரும்! வனிதை! வனிதை!

(அனைவரும் வர)

கிட்டினள், கிட்டினள்! கீசகக் காளி!
பிடித்துக் கொள்ளும் பெயர விடாதே.
பெண்ணிவ ளல்ல பெரிய பிசாசு!
எளிமை யென்ன விரங்க லாகா.
இத்தனை யாமு மெத்தனை சொல்லி
யதட்டி யுரப்பினு மச்ச முளதோ?
நீள நிமிர்ந்து நீலி யென்ன
வாட்ட மின்றி வடிவே லேபோல்
நோக்கிற் கொல்ல நினைந்தா ளோகாண்?
பூச்சி காட்டுதோ பொதியு மிருளிடை?

தள்ளிச் சென்று தமையனொ டிவளை
யெமபுர மெய்த வெரித்தல் விகிதம்.
தம்பி நீபோய்த் தமையற் சிதவைத்
திரட்டித் தாராய். அண்ணே, அண்ணே,
யரியே மூட்டி யடுக்க வேண்டிய
வெரிகரும் பெடுத்து வருவம் வருவம்.
அரமனைக் காக்கிய வகிலு மாரமும்
விரவிக் கிடக்குங் குப்பை கொளுத்தித்
தகனஞ் செய்வோந் தடையே யில்லை.

(சிலர் எரிமடுக்கச் சிலர் உடற்குறை படுக்க)

உபகீசகர் துயரப்பட

ஈச னெழுதினை து மிப்படியோ யாமெலா
நாச மடைகின்ற நாளோகாண்-மோசமாம்
பாசமெமைப் பற்றிப் பரிந்திழுக்க வையையோ
நேச மிலையெனுமோ நீ.
வந்த பழியையும் வாய்திறந்து சொல்லாயோ
விந்த விதமென்ன யாமறியச்-சொந்தமாம்
பந்த மிவளென்னப் பாராது போனுயோ
வெந்தவித மென்றெண்ணு வேம்.
மானமும் போச்சோ மதிமுகம் பாதிக்கத்
தானமு மின்று தொலைந்ததோ-வானவழி
போனவித மென்ன புதுமையோ வண்ணலே
வான திதுவென் றறை.
மண்ணலங் கொண்ட மணிவயிரத் தோள்களொரு
பெண்ணலங் கொள்ளப் பெறுதேயோ-கண்ணுமொரு
விண்ணலங் கொள்ள விரைந்தெழுந்த தையையோ
வெண்ணல மேழைமை யேம்.
ஆன பிறப்பை யடியோடு தின்றின்ன
மோனச் சிறுக்கி மகிழாளோ-வீனமுள

கானத் தெரிதின்னைக் காணுமோ வெம்முனுடன்
மானக் கொளுத்து மகிழ்ந்து.

(பலாயனப்பாவையைப் பற்ற)

பலா மனதில் மோகன மந்த்ரம்.

ஓடிவா விந்த்ரகண்டி யுருவ காளி
ஆடிவா வெமகாளி யம்மையே பராசக்தி;
கூடிவா கௌமாரி கார்த்தி வீரி
வாடிவா வடபத்ர காளி ரூபி
நாடிவா நிர்வாணி துர்க்கையே ராஜசக்தி
மூடிவா மோடியெடு மூல சக்தி
மெச்சுமொரு மோகனமு மெச்ச மெச்ச
வெதிராளி யென்னைப்போல் பேதி பேதி!
ஈரேழு லோகமெலா மிச்சை யிச்சை;
வாலையே வசியமே ஆஆ வாவா!
மூலமே மோகனமே இளரீ வாவா!
உருத்ரவுச் சாடனமே ஓஓ வாவா!
ஓம்வாசி மநய மோகநு யநம:

(உப கீசகரெலாம் வி-சா உருவாக)

உபகீசகர் அக்கிப்பிரவேசமும் வசமும் உப-கீ-இலர்.

மோசக் காரி முழுது மாட்டடா
நாச காலிநன் ருக நெட்டடா
பாச மற்றிவளைப் பற்றிப் போடடா
போடப் போடப் பின்னும் பிறக்குயோ!
வென்ன வதிசய மெட்டிப் பிடியடா
போக விடாதே போலி கடாரி
யண்ணலை யழித்த வதக்காரி யாமடா!
கட்டையிற் றள்ளிக் கருக வாட்டடா!
குத்திக் குத்திக் குலைப்பது காணடா!
ஐயோ! ஐயோ! அன்யாய மாயி!
ஆன துணைவ ரனைத்துந் தொலைத்தா

ளெம்மையும் பற்றி யெரியிற் கொளுத்தினள்
எரியு தையோ! வெய்த்தன மென்னே!

(மோகன மந்திரத்தாலொருவரை
யொருவர் எரியிற்றள்ளவும் பலா-
குத்தி வீழ்த்துக.)

உப கீச கர்சிலர். } அண்ணலையே தின்றுநட மாடு மிவளி
னெண்ணமெலா மேகவுட லேக விடுமே.
கண்ணிலொரு கருணையிலாக் கட்டழகி யோ,விவள்
பண்ணினதோர் பாவமென்னப் பார்க்கப் படுமோ?
விண்ணினையே வாட்டவல்ல வித்தாரக் காரி,யினி
மண்ணிலெமை மாட்டவென்ன மயக்கங் கொளுமோ!

உப கீச கர் சிலர் } பெண்ணாப் பிறந்ததோ பேயாப் பறந்ததோ
கண்ணே யிருந்ததோ காதே யறுந்ததோ
வாயே வறண்டதோ நாயே யுனைத்துரந்து
சுட்டசுடு காட்டிலே சோகமுற வையாது
நட்டநடு வீட்டிலே நல்கினது மாவதோ?
எட்டியிடு மூளிநீ தட்டிடுவ மிப்பவே
குட்டியிடு பூனைபோ லொட்டியுல வாதே
விட்டிடுவ மென்னுநீ மெட்டிநட வாதே.

உப கீச கர்வதம் } அண்ணாவுனைத் தின்றவரு பெண்ணா மிவளை
யெண்ணாதினிக் கொன்றலெனக் கோபந் தணிமோ!
-பரி தாபந் தணிமோ? - செறி
பாபம் பணிமோ?
சொன்னாலுமிம் மின்னாளுனை
யுன்றதொரு வின்னாச்செய
மன்னாதினி யுன்னாவியோ
டின்னாளிலே துன்னாநனி
கெட்டி விடுமே! யிவளைத்

தட்டி விடுமே!
கெட்டிவிடத் தட்டிவிடும்! கட்டியினிக் கிட்டிவிடும்!
கிட்டவா! யெட்டவா!
முட்டவா! வொட்டவா!
தொட்டவா பட்டவா கெட்டவா விட்டவா
யாரு மில்லையடா! - யொரு
பேரு மில்லையடா!
விடுமெனவோ? வடுமனதி
விடுமெனவோ? சுடுமெனவோ?
கொடுமன தொடுமுனைச் சுடவர வடுவது,
சொல்லித் தொலே! யுன்னைக் கொல
வில்லைத்திற மெம்மைக்கொலே
கொள்ளுதே! வையோ
துள்ளுதே! சற்றே
நில்லையே, யில்லையே, மெல்லையே, வெல்லையே!-அண்.

(உபகீ-மாளா)

பலா- கண்ணே கடுகியிக் கானக நீங்குவம்
விண்ணே விடிய விளங்குமால்—பெண்ணேநீ
யெண்ணே லெமதுள வெட்டுணே யாயினு
மண்ணே யெனக்கிடப்ப மால் (ஏக.)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 2 | கொழு | கொளு |
| 6 | 15 | முறண்டு | முரண்டு |
| 12 | 12 | கறுப்பு | கருப்பு |
| 25 | 28 | போர்ந்தும் | பேர்ந்தும் |
| 26 | 24 | பொலிமனே | பொலிமினே |
| 27 | 27 | டுத்திலபர்ஞ் | டுத்திலர்பஞ் |
| 29 | 27 | நாள்ளும் | நாளும் |
| 33 | 7 | இரண்டாங்களம் (உத்தியானவனம்) | |
| 34 | 16 | புப்பறி | பூப்பறி |
| ,, | 19 | பூப்பரி | பூப்பறி |
| 35 | 4 | மலர்பரி | மலர்பறி |
| 37 | 23 | யிளைய | இளைய |
| 41 | 5 | கிதாணிம் | கிதாணியும் |
| 54 | 14 | சம்மை | செம்மை |
| ,, | 15 | வப்பா | யப்பா |
| 63 | 12 | கடுதத | கடுத்த |
| 79 | 19 | வம்பெனை | வய்பனை |